திருவள்ளுவர் ஆண்டு 2036

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 99 பகுதி : 7 சூலை 2005

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

சூலை-05

தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி	தலைவர்
திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார்	துணைத்தலைவர்
திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.	செயலாளர்
திரு. மா. சங்கரபாண்டியன் பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திரு. டாக்டர் ந.சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S. (Uro) F.I.C.S.	உறுப்பினர்
திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி என்ற அசோக் பி.எல்.,	உறுப்பினர்
திரு. ச.பரங்குன்றம் பி.ஏ.,	உறுப்பினர்
திரு. வே.திருவரங்கராசன்	உறுப்பினர்
திரு. இரா.குருசாமி பி.ஏ.,	உறுப்பினர்
திரு. க.முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திரு. இரா.கண்ணன்	உறுப்பினர்
திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி பி.இ.,	உறுப்பினர்
	உறுப்பினர்

கல்லூரிக் குழு

டாக்டர் திரு.ந.சேதுராமன், M.S.,M.Ch.(URO).,M.N.M.S.(URO).,FICS.,	தலைவர்
திரு. மா. சங்கரபாண்டியன், பி.ஏ.பி.எல்.,	செயலாளர்
திரு. இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.,	உறுப்பினர்
இராஜா. திரு. முருகதாஸ் தீர்த்தபதி	உறுப்பினர்
திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார்	உறுப்பினர்
திரு. ச.பரங்குன்றம், பி.ஏ.,	உறுப்பினர்
திரு. இரா.குருசாமி, பி.ஏ.,	உறுப்பினர்
திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி, பி.இ.,	உறுப்பினர்
திரு. க.முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திருமதி. வாசுகி ராஜா எம்.எஸ்.சி., எம்ஃபில்.,	உறுப்பினர்
திரு. இரா.கண்ணன்	உறுப்பினர்
திரு. மா.ச.மாரியப்ப முரளி பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
டாக்டர் திரு. க சின்னப்பா பி.எச்.டி., முதல்வர்	உறுப்பினர்
டாக்டர் திருமதி. வீ.காந்திமதி பி.எச்.டி., இணைப்பேராசிரியை	உறுப்பினர்
டாக்டர் திருமதி. செ.தனலெட்சுமி பி.எச்.டி., இணைப்பேராசிரியை	உறுப்பினர்
பல்கலைக்கழக உறுப்பினர்	

செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 99
பகுதி : 7
சூலை 2005

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2036

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச்சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 60	ரூ. 600
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 6	ரூ.

ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம்.

பதிப்பாசிரியர் இரா. சதாசிவம் எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

பொருளடக்கம்

இதழ்மணம் - 134

நீத்தல் விண்ணப்பம் - 136
முனைவர் பெ.சுயம்பு

சிலம்பில் உயிர்நிலை காதை எது? - 144
பேராசிரியர் (மேஜர்) கதிர் மகாதேவன்

பெரியபுராணக் காப்பிய ஒருமை - 149
முனைவர் சுப. அண்ணாமலை

மொழிக் குடும்பங்களும் மொழி வகைகளும் - 159
முனைவர் இரா. கோதண்டராமன்

மாணிக்கவாசகர் வாழ்வியலுக்குக் காட்டிய நெறிகள் - 168
உ. கருப்பத்தேவன்

இதழ் மணம்

பேராசிரியர் முனைவர். பெ. சுயம்பு அவர்களின் நீத்தல் விண்ணப்பம் கட்டுரை இதழில் இடம் பெற்றுள்ளது. இக்கட்டுரையில், பக்தி இயக்கம் தழைத்தமையால் தமிழகம் பெற்ற நன்மை என்ன? அருளாளர்களின் நோக்கம் என்ன? என்பதைக் கோடிட்டுக்காட்டுகிறார் ஆசிரியர். நெஞ்சக்கனகல்லு நெகிழ்ந்து உருகுதலே இறைவனை அடைவிக்கும் எளிய வழி எனக் காலங்காலமாகச் சமயச் சான்றோர் கூறி வந்துள்ளனர். நீத்தல் விண்ணப்பத்தில் மாணிக்கவாசகப் பெருமானும் இதனையே வலியுறுத்துகிறார். விடுதி கண்டாய் என்னும் சொல்லை மீண்டும் மீண்டும் வாசகர் பயன்படுத்தியுள்ளார். இச்சொல் ஒப்படைத்தலையே குறிப்பாக உணர்த்துகிறது. மனம் அடங்குதலே பற்றை ஒழிக்கும் பிறவித் துன்பத்தைப் போக்கும் என்பன போன்ற அரிய பெரிய கருத்துக்களைப் படிப்போர் உளங் கொளத் தக்கமுறையில் இயம்புகிறார்.

சிலம்பில் உயிர்நிலைக் காதை எது? என்ற வினாவையே தலைப்பிட்டு விடைகாணும் கட்டுரையைப் பேராசிரியர் முனைவர். கதிர். மகாதேவன் அவர்கள் படைத்துள்ளார்கள். தம்முடைய பரந்துபட்ட புலமைத் திறன் கொண்டு ஆய்வு நோக்கில் விடையளித்துள்ளார்கள். இளங்கோவடிகள் அடைக்கலக் காதையைத் தம் நுண்ணறிவால் படைத்துக் காப்பியக் கதைக்கு முழுமை தரச் செய்துள்ளார் எனக்கூறும் கட்டுரை ஆசிரியர், அடைக்கலக் காதையே சிலம்பின் உயிர்நிலைக்காதை என்னும் சீர்மையுடையது என நிறுவுகிறார்.

அடுத்த கட்டுரையாக, பேராசிரியர். முனைவர் சுப. அண்ணாமலை அவர்களின் அணைக்கு அடங்கா அன்பு வெள்ளம் இடம் பெறுகிறது. இறைப்பணியைத் தம் வாணாட் பணியாகக் கைக்கொள்ளும் தொண்டர்கள் தம் வாழ்வில் எதிர்கொண்ட தடைகள் எவை, அத்தடைகள் அடியார்களின் ஆன்ம வீரத்தை எவ்வகையில் பெருகி எழச் செய்தன, அவர்தம் அன்பு வெள்ளம் அத்தடைகளை எவ்வாறு தகர்த்தன? என்பன போன்ற செய்திகளை நுணுகி ஆராய்ந்து கட்டுரையைத் தந்துள்ளார்கள். அடியார்கள் எவ்வகையில் ஒருங்கு வைத்து எண்ணத்தக்கவர்கள் என நிறுவும் திறம் சிந்திக்கத் தக்கதாகும்.

நான்காவதாக, பேராசிரியர் முனைவர். இரா. கோதண்டராமன் அவர்களின் மொழிக் குடும்பங்களும் மொழி வகைகளும் கட்டுரை அமைந்துள்ளது. உலகமொழிகளை வகைப்படுத்தி ஆராயும் போக்குகள் வளர்ந்துள்ளன. இவ்வளர்ச்சியால் வேறு வேறு குடும்பங்களைச் சார்ந்த மொழிகளை ஒப்பிட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வகையான ஆய்வுகளால் மொழிகளின் தோற்றத்திற்குக் காரணமான தொன்மொழியை மீட்டுருவாக்கம் செய்யலாம். மேலும், மொழிகளின் வரலாற்றையும் வளர்ச்சிப் போக்கையும் புரிந்துகொள்ளமுடியும் என்ற செய்திகளை எளிமையான நடையில் எடுத்தியம்பியுள்ளார். மொழியியல் பின்னணியை மட்டும் இவ்வகையான ஆய்வுகளுக்குப் பயன்படுத்தாமல் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட குடிப்பெயர்ச்சிகளையும் நடமாட்டங்களையும் துணைக்கொள்வது மொழிகளின் அமைப்பியல் ஒற்றுமையைப் புரிந்துகொள்ள உதவும் எனும் கருத்து மனங்கொள்ளத்தக்கதாகும்.

ஐந்தாவது கட்டுரையாகப் பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர் உ. கருப்பத்தேவன் அவர்களின் மாணிக்கவாசகர் வாழ்வியலுக்குக் காட்டிய நெறிகள், இடம் பெற்றுள்ளது. ஆன்மாவை விளக்கம் செய்து ஆன்மதரிசனமும் கடவுட் தரிசனமும் தந்தருளுவது சோதியே எனப் பெருமானார் காட்டிய நெறியை விளக்குகிறார் கட்டுரையாளர். களம் காணத்துடிக்கும் ஆர்வம் வேகம் அவர் எழுத்தில் மிளிர்கின்றன எனலாம்.

நீத்தல் விண்ணப்பம்

முனைவர் பெ. சுயம்பு
தமிழ் இணைப் பேராசிரியர்
ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர்.

பக்தி இயக்கப் பெரியோர்

பக்தி இயக்கப் பெரியோர்கள் சமணர்களாலும் பௌத்தர்களாலும் வீழ்ச்சியுற்ற தமிழ்ப் பண்பாட்டுக்குப் புத்துயிர் அளித்தனர். சிற்றின்பக் காரணிகள் என்றும் அவற்றால் ஆன்ம வாழ்வின் முன்னேற்றம் தடைபடும் என்றும் ஒதுக்கி வைக்கப்பட்ட பழந்தமிழ் அக இலக்கிய மரபுகளும் இசை, கூத்து முதலாய இன்கலைகளும் எழுச்சி பெற்றன. இறையுணர்வு இன்றி, அறவுணர்வு மங்கிய மாந்தர் இறையன்பில் திளைத்து இன்புறும் வாய்ப்பு இப்பெரியோர்களின் இலக்கிய, சமூக, ஆன்மீகப் பணியால் தமிழர்க்கு இயைந்திற்று.

திருவாசகம்

பக்தியை விதைத்துப் பயிராக்கிப் பழம்தரும் மரம் ஆக்கிய சான்றோர்களுள் மாணிக்கவாசகப் பெருமான் குறிப்பிடத்தக்கவர். பக்தியையும் தமிழ் இலக்கியத்தையும் மக்கள் வயமாக்கிய பேரறிவாளர் அவர். சிற்றூர்களிலும் மகளிரிடமும் ஒன்றியிருந்த பாவை நோன்பு, அம்மானை, சுண்ணம், சாழல், ஊசல் போன்ற வழிபாட்டு முறைகளையும் வாழ்வியற் சடங்குகள், விளையாட்டுக்களையும் சிவஞானக் கருத்துக்களை எடுத்துக் கூறுதற்கு உரிய விளக்க உத்திகளாகக் கையாண்டவர். இந்த உத்திகள் மக்களின் வாழ்வியலுடன் ஒன்றியவை. பாடும், கேட்கும் அம்மக்கள் தம் வாழ்வியலைச் சுவைக்கின்ற உணர்வை எய்தும் வாய்ப்பினைப் பெற்றனர். இதனால் மக்கள் உய்வடைந்தனர் ; தமிழும் மக்களால் அறியப்பெற்று உய்வு பெற்றது ; மாணிக்கவாசகப் பெருமானும் தமது படைப்பு யாரைச் சேரவேண்டும் என்று அவாவினாரோ, அவரைச் சென்று அடைந்தமையால் மனநிறைவும் பெறலானார். பக்தி இயக்கம் விரைந்து, நிலைத்துப் பரவியதற்கு அவ்வியக்கப் பெருமக்கள் மேற்கொண்ட இலக்கிய உத்தி பெருங்காரணம் எனலாம்.

எளிய பழகு தமிழ்ச்சொற்கள் இன்னிசை தழுவிய ஓசை, அன்றாட வாழ்வில் காணுகிற பொருள்களையும் நிகழ்வுகளையும் கருத்தை விளக்குதற்கு உரிய உவமையாகவும் உருவகமாகவும் புனைந்துள்ள விவரிப்பு முறை, படிப்போரையும் கேட்போரையும் உள்ளம் உருகச் செய்யும் உணர்ச்சிமிகு கருத்தாழம் கொண்ட நடை போன்ற எழில்மிகு கவிதைப் பண்புகளால் திருவாசகப் பாடல்கள் என்ற கருத்திலிருந்து நழுவித் திருவாசகத் தேன் என்ற உணர்வை உமிழ்கின்றது. சைவ சமயத்தைச் சார்ந்த மாந்தரைத் தமது கிறித்தவ சமயத்திற்குத் திசைதிருப்பும் பணிக்காக அயல்நாட்டிலிருந்து வந்திருந்த ஜி.யு.போப்பையர் '**எலும்பை உருக்குகிற பாடல்கள்**' என்று மனம் திறந்து வாய் விரிந்து புகழுகிற பெருமையைப் பெற்றது திருவாசகம்.

சைவப் பக்திப் பாடல்களுள் திருவாசகப் பாடல்கள் ஞானப்பாடல்கள் என்றும் வடமொழியிலுள்ள உபநிடதங்களுக்கு இணையானவை என்றும் போற்றப்படுகின்றன. இறைவனுடன் உயிர் இரண்டற்றுத் தோற்றம் அளிக்கிற அத்துவித உணர்வு இப்பாடல்களில் இழையோடுவதே இதற்குக் காரணமாகும். இறைவனை அடைதற்குச் சைவம் பரிந்துரைக்கிற சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நெறிகளுள்ளும் திருவாசகப் பாடல்கள் ஞானநெறிக்கு ஆற்றுப்படுத்துவன என்பது சைவ மரபு வழிப்பட்ட உண்மையாகும்.

அழுதால் பெறலாம்

மாணிக்கவாசகப் பெருமான் சிவஞானத்தை அடைதற்கு அரிய வேதங்களையும் சாத்திரங்களையும் கசடறக் கற்று அவற்றிற்குத் தக நிற்க வேண்டும் என்று கூறவில்லை. இறைவனின் பேரருளை உணர்ந்து, தமது பிழைகளை நினைந்து, அவற்றை நீக்கித் தன்னை ஆட்கொண்டு அருளவேண்டும் என்று நெஞ்சக்கல் உருகி நீராய்க் கசிந்து அழுது இறைவனிடம் விண்ணப்பம் செய்தாலே அமையும் என்று போதிக்கிறார்.

யானே பொய் என்னெஞ்சும் பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனைவந் துறுமாறே

என்று அவரது வாழ்க்கையே உலகமாந்தருக்குப் போதனையாக விளங்குகிறது.

தளை நீக்கம்

இறைவனை நினைந்து உருகிக் கண்ணீர் மல்கி அழுது புலம்பும் நிலை உயிர்களுக்கு உடனே நிகழ்ந்திடாது. வினைப்பயனில் பற்றற்றதாகிய வினைத்தளையிலிருந்து நீங்கிய பக்குவத்தை உயிர்கள் பெறவேண்டும். தளை நீங்குவதற்குரிய முதிர்வுக் காலத்தின்போது இறைவன் தாமே எளியவனாய் வந்து ஆட்கொண்டருளுவான். இறைவனது அருளாகிய சக்தியின் பதிவு உயிர்களின் மீது விழும் அதன் பயனாக அவனே சிவகுரு வடிவில் தோன்றி, சிவஞானத்தைப் போதிப்பான். அதனால் தளைகளாகிய ஆணவம், கன்மம் (வினை), மாயை மூன்றும் உயிர்களை விட்டு நீங்கும். உயிர்கள் கட்டற்று, இன்ப துன்பங்களில் விருப்பு வெறுப்பு நீங்கி, சீவன் முக்தன் என்ற நிலையில் திளைக்கும். உடல் தானே வலுவிழந்து விழும் வரையில் தொண்டாற்றிக் கொண்டிருக்கும். உடல் உணர்வுக்கும் உயிருக்கும் தொடர்பற்ற நிலை அது.

தத்தளிப்பு

இறைவனால் ஆட்கொள்ளப்பட்டாலும் தளைகளின் காரியமாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள உடலுடன் பொருந்தி இருப்பதனால், தளைகளின் ஆற்றலின் வாசம் உயிரை விடாது பற்றியிருக்கும். கூடையிலிருந்து மலர்களை முற்றிலுமாக எடுத்துவிட்ட பின்னரும் மலரின் வாசம் கூடையைப் பற்றிக்கொண்டிருப்பதைப் போன்றது இப்பற்று. இதனை வாசனாமலம் என்பர். இந்நிலையில் உயிர் இறைவனுக்கும் தளைகளுக்கும் இடையே சிக்கித் தத்தளிக்கும். தளைகளின் காரியமாகிய உடல், பிரபஞ்சம் (அனைத்துலகங்கள்) ஆகியவற்றைப் பொய்யானவை ; பிறவித் துன்பத்தில் ஆழ்த்துபவை என்று உணர்ந்து அவற்றைப் பொருட்டாகக் கருதாது புறக்கணித்தலிலும் பிறவித் துன்பத்திலிருந்து மீட்டுப் பேரின்பத்தில் திளைக்கச் செய்பவன் இறைவனே என்று உணர்ந்து, அவனை இடைவிடாது பற்றித் தொடர்தலிலும் உறுதிகொள்ளும்போது, இத்தத்தளிப்பு அடங்கும்.

நீத்தல் விண்ணப்பம்

இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட நிலையிலும் மாணிக்கவாசகப் பெருமானுக்கும் இந்தத் தத்தளிப்பு இருந்தது. இறைவனின் அருட்சக்தியாகிய பேரருளின் ஈர்ப்புக்கும் தளைகளின் ஈர்ப்புக்கும் இடையில் அவர் சிக்கி அல்லல் உற்றார். இந்த அல்லலில்லிருந்து தமது

ஆற்றலால் நீங்குதற்கு இயலாதவராகி, இறைவன் சிவனை நோக்கி, **'இப்பிரபஞ்சத் தளையுள் சிக்கி அல்லலுறாதவாறு நின்னிடம் அணைத்து, தடுத்தாட்கொண்டருள வேண்டும்'** என்று கெஞ்சி அழுது விண்ணப்பிக்கிறார்.

உத்தரகோச மங்கையில் வீற்றியருளுகிற பசுக்களின் பதியாகிய சிவனை நோக்கி நீத்தல் விண்ணப்பம் விடுக்கிறார். இறைவனது அருள் இடையீடின்றித் தம்மைத் தொடர்தல் வேண்டும் ; தமது நினைவும் சொல்லும் செயலும் உள்ளிட்ட வாழ்வியல் யாவும் இடையீடின்றி அவ்விறைவனையே பற்றித் தொடர்தல் வேண்டும் என்னும் நோக்கத்தில் ஐம்பது கட்டளைக் கலித்துறைகளையும் அந்தாதித் தொடையில் அமைத்துள்ளார்.

நீத்தல் விண்ணப்பம் என்பது பிரபஞ்சப் பற்றினை நீத்தற்கு இறைவன் அருளவேண்டும் என்று வேண்டுவதாக அமைந்துள்ளது. விளங்கிய அறிவினையும் வினையின் நீங்கிய இயல்பினையும் கொண்ட இறைவனால் மட்டுமே உயிர்களை அறிவுடையனவாக விளக்குதலும் வினையிலிருந்து நீக்குதலும் இயலும். உயிர்கள் இறைவனால் ஆட்டுவிக்கப்படுவனவே. அவற்றின் தன் முயற்சியால் உய்வடைதல் இயலாது. எனவே மாணிக்கவாசகப்பெருமான் **'இப்பிரபஞ்சப் பற்றிலிருந்து என்னை விட்டுவிடுவாயாக (நீக்கி விடுவாயாக)'** என்று இறைஞ்சுகிறார். **'இயலாத எளியன் ஆனமையால் யான் நின்னைச் சரணடைந்துவிட்டேன் : நினது அடிமை என்னை மீண்டும் இப்பிரபஞ்சப் பற்றில் அமிழ்ந்து அழிந்திடுமாறு செய்திடாதே'** என்று அழுகிறார்.

விடுதி கண்டாய்

'விடுதி கண்டாய்' என்னும் சொல்லை அவர் பாடல் தோறும் அமைத்திருப்பது அவரது அழுகையினையும் இயலாது எளியனாகி நிற்கும் இளிவரலையும் உணர்த்துகிறது. விடுதி (நீக்கிவிடுவாயாக) என்ற சொல்லுடன் கண்டாய் என்ற துணைவினையைச் சேர்த்து, இறைவனையன்றி வேறு ஆதரவு அற்ற நிலையினையும் அவன்பால் தனக்கு உள்ள நெருக்கமான அன்பு காரணமாக அவனை வலியுறுத்துதலையும் பெருமானார் உணர்த்துக்கிறார். கண்டாய் என்னும்

வினைச்சொல் தனக்குரிய வினைப்பொருளை இழந்து, விடுதி என்ற வேறொரு வினைக்குச் சார்பான உணர்ச்சிப் பொருளைத் தருகிறது. அதாவது துணைவினை என்ற தகுதிக்குத் தாழ்ந்து விடுதி என்ற வினையின் பொருளையே வெளிப்படுத்துகிறது. உயிர்களும் இறைவன் அல்லது தளைகளைச் சார்ந்து தம் இயல்பை இழந்துவிடுகின்றன. இறைவனின் அருட்செயலையே சார்ந்திருத்தல் அல்லால் தனக்கெனத் தனியொரு செயல் இனி இல்லை என்னும் முழுமையான ஒப்படைத்தலை இச்சொல்லாட்சி குறிப்பாக உணர்த்துகிறது.

பதி, பசு, பாசம்

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கின்பசு பாசநில் லாவே

என்னும் திருமந்திரம் இறைவன் (பதி) உயிர்கள் (பசு) தளைகள் (பாசம்) என்னும் மூன்று பொருள்களின் இயல்புகளை விவரிக்கிறது. உயிர்கள் சார்ந்ததன் சார்பின ஆதலும் இறைவனைச் சிக்கெனப் பிடித்தபோது தளைகள் உயிர்களை விட்டுநீங்கி விடுதலையும் இது குறிப்பிடுகிறது.

மயக்கம்

இவ்வுலக இன்பத்தையும் பெண், பொன், பதவி, உறவு ஆகியவற்றின் பற்றுக்களிலும் திளைத்து ஊறிப்போன உயிர்கள் நிலையாக இவற்றிலிருந்து விடுதலை பெறுதல் இயலாது. இறைவனைப் பற்றித் தொடர்ந்தாலும் பழைய தொடர்பு காரணமாகத் தளைகளின் நினைப்பும் சார்தலும் ஏற்படக்கூடும். இதனை மாணிக்கவாசகப் பெருமான்,

"இருதலைக் *கொள்ளியின் உள்ளெறும் பொத்து நினைப்பிரிந்த*
விரிதலை யேனை விடுதி கண்டாய்"

என்று குறிப்பிடுகிறார். இறைவனா? இப்பிரபஞ்சமா? மீண்டும் பிறவாத பேரின்பமா? பிறந்து இறந்து சுழல்கிற சிற்றின்ப வீழ்ச்சியா? எதனைப் பற்றித் தொடர்வது என்று மயங்கி அழிகின்றேன். உத்தரகோச மங்கைக்கு அரசே! என்னைப் பிரபஞ்சத் தளையிலிருந்து நீக்கி விடுதலை செய்தருளவேண்டும் ; கைவிட்டு விடாதே என்று அரற்றுகிறார்.

பெண்ணாசை

மண்ணுலக வாழ்வில் ஆசைகளுக்கெல்லாம் ஆசையாக - அறாத ஆசையாக விளங்குவது பெண்ணாசையே. உடல் மெலிந்து, உணர்விழந்து, உயிரிழக்கும் நிலையிலும் மாந்தரையும் பிறவுயிரிணங்களையும் இக்காம ஆசை விடாது பற்றிக்கொண்டிருக்கும். ஏனைய உயிரினங்களைப் போன்று தாமும் இந்த ஆசையுள் சிக்கி அல்லலுற்றவர் பெருமானார். இறைவனருள் வாய்க்கப் பெற்ற நிலையிலும் அந்த இழிவான ஆசை அவ்வப்போது தலைகாட்டுகிறது.

"செழிகின்ற தீப்புகு விட்டிலில் சின்மொழி யாரில்பன்னாள்
விழுகின்ற என்னை விடுதி கண்டாய்"

என்று தன்னை அழித்துவிடும் என்று உணராமல் விட்டில் பூச்சி தீயுள் புகுவது போன்று தாம் பெண்டிர் இன்பத்தை நாடுதலைக் குறிப்பிடுகிறார்.

ஐம்புலன்களின் கொடுமை

'கொம்பரில் லாக்கொடி போல்அல மந்தனன்'
'ஆனைவெம் போரில் குறுந்தூறெனப்புல னால்அலைப்புண்
டேனைஎந் தாய்விட்டிடுதி கண்டாய்'
'எறும்பிடை நாங்கூழ் எனப்புலனால் அரிப்புண்டு அலந்த
வெறுந்தமி யேனை விடுதி கண்டாய்'
'பொதும்புறு தீப்போல் புகைந்தெரியப் புலன்தீக்கதுவ
வெதும்புறுவேனை விடுதிகண்டாய்'

கண்களுக்கு வெளிப்படத் தோன்றுகிற இப்பிரபஞ்சமும் அதன் கண்ணுள்ள இன்பங்களுமே நிலைத்தவை என்று பிறழ உணர்ந்து, ஐம்புலன்களின் சிற்றின்ப வேட்கையால் ஈர்க்கப்பட்டுத் துன்புறுதலைப் பெருமானார் குறிப்பிடுகிறார். இத்துன்பத்திலிருந்து தனது ஆற்றலால் (சுயமாக) விடுதலை பெறுதல் இயலாது என்பதனையும் (வெறுந்தமியேன்) எடுத்துரைத்துத் தம்மை ஐம்புலன்களின் பிடிப்பிலிருந்து நீக்குமாறு வேண்டுகிறார்.

'நெடுந்தகை நீ என்னை ஆட்கொள்ள யான்ஐம்
புலன்கள் கொண்டு
விடுந்தகை யேனை விடுதி கண்டாய்'

பரம்பரை பரம்பரையாக இறைவனைப் பணிந்து வழிபடுகிற பழைய அடியார்களுக்கு அருள்புரியாது இப்பிரபஞ்சமே எல்லாம் என்று அறியாமையால் துன்புற்ற தம்மைத் தானே வந்து ஆட்கொண்டான் இறைவன் ; ஆனால் தாமோ மீண்டும் மீண்டும் ஐம்புல வேடர்களையே இன்புறுத்துபவர் என்று எண்ணிச் சார்வதாகக் குறிப்பிடுகிறார்.

பேரருளைத் துய்க்க இயலாமை

இறைவனை விட்டுப் பிரிந்து செல்வதையும் அதனால் உண்டாகும் அல்லலையும்,

'பெருநீர் அறச் சிறுமீன் துவண்டாங்கு நினைப்பிரிந்த
வெருநீர்மை யேனை விடுதிகண்டாய்'

என்று நீரற்ற குளத்திலுள்ள சிறுமீனின் நிலைக்கு ஒப்பிட்டுக் கூறுகிறார்.

பிரபஞ்சமும் அவற்றில் காணப்படுவனவும் உயிர்களை உய்தற் பொருட்டு இறைவனது பேரருளால் உருவாக்கப்பட்டவை. அவனது அருளினை அளந்தோ துய்த்தோ அறுதியிடல் இயலாது. அத்தகைய பேரருள் தம்மைச் சுற்றிலும் நிறைந்து இருப்பினும், உயிர்களின் சிற்றறிவினால் அதனை உணர்ந்து துய்க்கவியலவில்லை.

'கடலினுள் நாய்நக்கி யாங்குஉன் கருணைக் கடலினுள்ளம்
விடலரி யேனை விடுதி கண்டாய்'

'வெள்ளத்துள் நாவற்றி யாங்குன் அருள்பெற்றுத் துன்பத்தின்றும்
விள்ளக்கி லேனை விடுதிகண்டாய்'

கடலில் நீர் மிகுதியாக உள்ளது. அதனை நாவால் நக்கி அருந்துதல் இயலாது. வெள்ளத்தினுள் நீந்திக் கொண்டிருந்த நிலையிலும் நாக்கில் வறட்சி உண்டாகிறது. இறைவனது அருளைத் துய்க்க இயலாத இளிவரலை மாணிக்கவாசகப் பெருமான் சிறப்பாக எடுத்துரைக்கிறார்.

இறைவனிடம் ஒப்படைத்தல்

'இருந்தென்னை ஆண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை'
'பொறுப்பர் அன்றே பெரியோர் சிறுநாய்கள் தம்
பொய்யினையே'

பெருமான் முழுவதுமாக இறைவனிடம் தம்மை ஒப்படைத்து விடுகிறார். இனி அவன் அவரை ஆட்சி செய்தாலும் வேறு யாருக்கும் விற்பனை செய்தாலும் ஒற்றி வைத்தாலும் அவருக்குக் கவலை இல்லை. சிறுநாய்களைப் போன்ற சிறுமை உடைய மனிதரின் குற்றங்களைப் பெரியோர் பொறுத்து அருளுவர். இதுவே உலக நெறி. இறைவன் தம் குற்றங்களைப் பொறுத்து ஆட்கொண்டு அருளுவான் என்று மனநிறைவு கொள்கிறார்.

நீத்தல் விண்ணப்பப் பாடல்கள் இறைவன் அருளுவான் என்று அமைதி கொள்வதும் தமது குறைகளை நினைந்து வாடுவதும் என இரண்டும் மாறி மாறி வருமாறு அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய விவரிப்பு மாணிக்கவாசகப் பெருமானை ஒரு பித்தனாகக் காட்டுகின்றன. இறைவனை அன்பின் உருவினனாக அவர் உணர்ந்து, அன்பின் மயமானவராக மாறியதன் விளைவு இது. இந்த மனநிலை பக்தர்களிடம் அமைதலை நாரதர் பக்தி சூத்திரமும், யஜ்ஞாத்வா மத்தோ பவதி, என்று கூறுகிறது.

நீத்தல் விண்ணப்பம் இறைவனது அருளின்றி உயிர்கள் தமது ஆற்றலால் இப்பிரபஞ்சப் பற்றையும், பிறவித் துன்பத்தையும் நீங்கி விடுதலை பெறுதல் இயலாது. இறைவனருளால் அவனைப் பற்றித் தொடர்ந்தாலும், தளைகளின் ஆற்றல் நிழல் போலத் தொடரும். அதனை, இறைவன் தொடர்பு பற்றியும் பிரபஞ்ச நீக்கம் பற்றியும் அசையாது உறுதி கொண்டால் நீக்கி உய்வடையலாம் என்று கூறுகிறது.

'செவ்வியல் மொழி'

செவ்வியல் மொழி என்ற தகுதி அம்மொழியில் இடம் பெற்றிருக்கும். இலக்கியத் தரத்தின் அடிப்படையில் வருகிறது. முதலில் அடையாளம் காணப்படுவது செவ்வியல் இலக்கியம். அவ்விலக்கியத்தைக் கொண்ட மொழி, செவ்வியல் மொழி. நன்றி.

திரு.வா.செ.குழந்தைசாமி,
மனோரமா இயர்புக் - 2005

சிலம்பில் உயிர்நிலை காதை எது?

பேராசிரியர் *[மேஜர்] கதிர் மகாதேவன்*, எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.,
முன்னைத் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

முதலில் உயிர்நிலை என்றால் என்ன? என்று காண்போம். ஒரு மனிதன் உடலில் உயிர்நிலை பல இடங்களில் காணப்படலாம். ஒருவனின் கழுத்தைப் பிடித்து அழுத்தினால் மூச்சுத்திணறி இறந்துபோகலாம். அதேபோன்று முகுளத்தில் அடிபட்டு இறந்து போதலும் உண்டு. இவ்வாறு பல இடங்களில் உயிர்நிலை ஒருவனுக்குக் காணப்படலாம். ஆனால், மூளையில் பாதிப்பு ஏற்படுமானால் இரத்தம் ஓட்டம் பாதிக்கப்பட்டு ஒரு சில மணித்துளிகள் குருதி மூளைக்குச் செல்லவில்லை என்றால், மூளை இறந்துபடக்கூடும். இருதயத்தில் இரத்தஓட்டம் நிற்குமேயானால் மீண்டும் அது வேலை செய்ய முயற்சி செய்யமுடியும். அதுபோல ஒரு கதையின் உயிர்நிலை என்று கூறக்கூடிய பகுதி அந்நூலாசிரியர் அந்தக் குறிப்பிட்ட பகுதியில் தன் நுண்அறிவினைச் செலுத்தி அக்கதைக்கு முழுமை அளிக்குமாறு செய்வர். இது ஒருமைப்பாடு எனத் திறனாளிகளால் சுட்டப்படும். ஒருமைப்பாடு என்பது மூவகைப்படும். ஒன்று கதை மாந்தர் தம் பங்கினை முழுமையாகச் சுட்டப்படுவதின் மூலம் கதையில் ஒருமைப்பாட்டைத் திறன்கொள் ஆசிரியர் சுட்டிக்காட்டுவர். இது போலவே கால ஒருமைப்பாடும், இட ஒருமைப்பாடும், அக்காப்பிய முழுமைக்கு வழிவகுக்க அக்காப்பிய ஆசிரியர் முயற்சி மேற்கொள்ளுவார். எனவே, ஒருமைப்பாட்டின் செயல்பாடுகள் காப்பிய அமைப்பு முழுமை அடைவதற்குத் துணை செய்கிறது எனலாம்.

சிலப்பதிகாரக் காப்பியத்தில் கோவலனின் குணச்சித்திரம் தொடக்கத்தில் முழுமையடையாமல் காட்டப்படுகிறது. எனவே, கோவலனைப் படிப்பவர்கள் பார்வையில் முழுமையானதொரு படைப்பாகக் காட்டுவதற்கு மதுரைக் காண்டத்தில் காணப்படும் அடைக்கலக் காதை பயன்படுகிறது. இக்காதை படைக்கப்படவில்லை என்றால், கோவலனைச் சிறப்பான குணச்சித்திர அமைப்பாகக் கொள்ளஇயலாது. கோவலன் வாழ்க்கையில் குற்றம் உடையவன் என்று கருதவேண்டிய சூழலிலேயே 14 காதைகள் வரை உறுதி செய்யப்பட்டு அவன்மீது எந்தப் பரிவும் ஏற்பட வழிவகை இல்லாமல் போயிற்று.

"குலந்தரு வான்பொருள் குன்றம் தொலைத்தேன், இலம்பாடு நாணுத்தரும்" என்று கூறுவதின் மூலம் அவன் தன் குறைப்பாட்டைத் தானே சுட்டிக் காட்டுகிறான்.

ஒரு மனிதனை எப்படிப்பட்டவன் என்று ஆராய வேண்டுமானால், அவன்தன் மனநிலையின் மூலமாகவே காண்பது நல்லது. கோவலனின் செய்கைகள் மூலம் அறிவதினால் அவனை முழுமையாகப் புரிந்து கொள்ளமுடியாது. "குணம்நாடி குற்றம்நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்" திறம்பட அவனைத் தேர்ந்து தெளிய வழிவகுக்கும். கோவலனைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்வதற்கு 'அடைக்கலக்காதை' பயன்படுகிறது. சாதாரணமாக ஒருவனைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமேயானால், அவன் யாருடன் பழகுகிறான் என்பதன் மூலம் தெரிந்துகொள்ளலாம். "உன் நண்பனைக் காட்டு, நான் நீ யார் என்று கூறுகிறேன்" என்று சொல்லுவதுண்டு.

கோவலன் நகர நம்பியர் திரிகிற வீதிகளில் திரிந்தானே தவிர அங்கு அவனுக்கு மோசமான நண்பர்கள் இருந்தார்கள் என்று காட்டப்படவில்லை. கோவலனைத் தென்றல்போல இளங்கோவடிகள் சுட்டுகின்றார். தென்றல் காற்று இழைந்து குழைந்து வரும் நிலையில் உடலுக்கு நற்பயன் நல்குகிறது. ஆனால் அக்காற்றுப் பூந்தோட்டத்தின் வழியாக வருமேயானால் நல்ல நறுமணத்தைச் சுமந்து கொண்டுவரும். அதே தென்றல் காற்றுத் துர்நாற்றம் வீசும் சூழல்கள் வழியாக வருமானால் அந்த மணத்தோடு வீசுவதைக் காண்கிறோம். கோவலனைத் தென்றல் காற்றுப் போலப் போகும் இடத்திற்கு ஏற்ப மாறுபவனாக இளங்கோவடிகள் காட்டுகிறார். ஆனால், அவன் பெரியவர்களையும் நல்லவர்களையும் துணைகொண்டு வாழவேண்டும் என்ற மனநிலை உடையவன் என்பதைக் கதையின் போக்கிலே காண்கின்றோம். புகாரிலிருந்து புறப்பட்ட கோவலன் வழித்துணையாகச் சமணத் துறவியாகிய கவுந்தி அடிகளை நாடுவதின் மூலம் அவன்தன் பண்பு புலனாகிறது. கண்ணகியின் தோற்றத்தைக் கண்ட அளவிலேயே கவுந்திஅடிகள் "கற்புக் கடம்பூண்ட இத்தெய்வம் அல்லது பொற்புடைத் தெய்வம் யாம்கண்டிலமால்" என்று கூறுவதின் மூலம் கவுந்திஅடிகளுடன் பழகிய அளவிலேயே அவள் தெய்வம் எனக்கொள்ளத்தகும் தகைமை உடையவள் என்பதை அடிகள் அறிந்துகொள்கிறார்.

கோவலனைக் கண்டும் பார்த்தும் பழகியும் வந்தவன் நான்மறையாளனாகிய மாடலன் ; கோவலனால் பெரிதும் மதிக்கப்படுகின்ற சிறப்பினை உடையவன். கோவலனுக்குப் பூம்புகாரில் உற்றத் தோழனாய் விளங்கியவன்; அடைக்கலக் காதையில் மாடல மறையோன் மூலம் கோவலனின் மாண்புகள் தெளிவாகச் சுட்டப்படுகின்றன.

மாதவிக்கு மகள் ஒருத்தி பிறந்த பொழுது அவளுக்குத் தன் குலதெய்வத்தின் பெயராகிய *'மணிமேகலை'* என்ற பெயரையே சூட்டுகிறான். அப்பொழுது அங்குக் குழுமியிருந்த அனைவருக்கும் கோவலன் பொற்காசுகளை வாரி வழங்கினான். அவ்வமயம் முதியவன் ஒருவன் தன் வளைந்த உடம்பைத் தடியால் தாங்கிக் கொண்டு முதுமை காரணமாகத் தளர்ந்த நடையோடு கோவலனிடம் தானம்பெறத் தயங்கித் தயங்கி வந்து கொண்டிருந்தான். அச்சமயம் யானை ஒன்று மதம்பிடித்து ஓடிவந்து அம்முதியவனைத் தம் தும்பிக்கையால் சுழற்றி எடுத்தது. அது கண்ட கோவலன் யானை கையில் தான் நுழைந்து அம்முதியவனை விடுவித்துக் கணநேரத்தில் யானைக் கொம்புகளைப் பிடித்து மேல் ஏறி யானை மத்தகத்தின்மீது அமர்ந்தான். விஞ்ஞையன் போலக் களிற்றின் கோபத்தை அடக்கினான் என்று மாடலமறையோன் கோவலனின் வீரச் செயலைப் பாராட்டுவதோடு

கடற்களிறு அடக்கிய கருணை மறவன்

என்று பாராட்டுகிறார்.

பிறிதொரு நிகழ்ச்சி : அதில் பிள்ளைப்பேறு இல்லாத பார்ப்பினி ஒருத்திக் கீரிப்பிள்ளையை வளர்த்து வந்தாள். அப்பார்ப்பினி சிறிதுகாலத்தில் ஒரு குழந்தையை ஈன்றாள். அக்குழந்தையைக் கீரிப்பிள்ளையின் பாதுகாப்பில் விடுத்துக் குடம் ஏந்தித் தண்ணீர் எடுத்துவரச் சென்றாள். அவள் மீண்டும் வரும்பொழுது அக்கீரிப்பிள்ளை வாயில் இரத்தத்தோடு அவளை எதிர்கொண்டது. தன் குழந்தையைத்தான் கீரிப்பிள்ளை கொன்று விட்டதாக நினைத்துத் தண்ணீர் ஏந்திவந்த குடத்தை அதன் தலையின்மீது போட்டுக் கொன்றாள். அதன் பின்னர் உள்ளே வந்து பார்த்தபொழுது நல்ல பாம்பொன்று கீரியால் கொல்லப்பட்டு இறந்து கிடந்ததைக் கண்டுப் பெரிதும் வருந்தினாள். தன் குழந்தையைக் கொல்ல வந்த நல்லபாம்பினைக் கீரி கடித்துக் கொன்றது என்ற உண்மையை அறிந்து மிக வருந்தித் தன் கணவனிடம் நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கூற, கொடிய பாவச் செயலைச் செய்த உன்னுடன்

இனி வாழமாட்டேன் என்று கூறி, வடமொழியில் ஒரு வாசகத்தைக் கொடுத்து 'இதைத் தக்கவர்களிடம் காட்டிப் பிழைத்துக் கொள்' என்று கூறிச் சென்றுவிட்டான். அந்த ஓலையில் சமஸ்கிருதத்தினால் எழுதப்பட்ட வரிகளை யாரும் புரிந்துகொள்ளவில்லை. கடைசியாக அப்பெண்மணி அவ்வோலையைக் கோவலனிடம் காட்ட, அவன் அந்த வாசகத்தைப் படித்து நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அறிந்து அவள் வாழ்நாள் முழுவதும் வாழ்வதற்குரிய தொகையை அளித்தான்.

கோவலன் பிறருக்கு உதவி செய்யும் மனம் படைத்தவன் என்று மாடலமறையோனால் அறிகிறோம். மாடலமறையோன் உரைத்த பிறிதொரு நிகழ்ச்சி இங்குக் குறிப்பிடத்தக்கது.

பத்தினிப் பெண் ஒருத்திக்கு எதிராகச் சாட்சி அளித்த காரணத்தினால் குற்றம்புரிவோரை அறிந்து உதைத்துக் கொன்று உண்ணும் பூதம் ஒன்று அக்கொடியவனை இழுத்துச்சென்றது. அக்கொடியவனின் சுற்றத்தோர் பெரிதும் வருந்தினர். அதுகண்ட கோவலன் விரைந்து சென்று அந்தப் பூதத்திடம் பொய்ச்சாட்சி சொன்னவனை விடுத்துத் தன்னைக் கொல்லுமாறு கூறினான். அதுகேட்ட பூதம்,

> *"நரகன் உயிர்க்கு நல் உயிர் கொண்டு*
> *பரகதி இழக்கும் பண்பு ஈங்கு இல்லை"*

என்று கூறி அந்த இழிமகனை அடித்துக்கொன்றது ; அதனால், அக்கொடியவனின் சுற்றத்தார் பெரிதும் வருந்தினர். அதுகேட்ட கோவலன் அவன்தன் சுற்றத்தார்க்குப் பல்லாண்டுகள் வாழ வழி செய்தான் என்று அறிகிறோம்.

கோவலன்தன் நற்குண நற்செய்கைகளை நன்கு அறிந்த மாடலமறையோன்

> *"இம்மைச் செய்தன யான் அறி நல்வினை*
> *உம்மைப் பயன்கொல்?"*

என இம்மைக்குப் புகழாரம் சூட்டுகிறான்.

தமிழர்தம் சீரிய பண்பாக விருந்தோம்பலும் அடைக்கலப் பொருளைக் காத்தலும் இங்கு அமைவதைக் காணலாம். சிபிச் சக்கரவர்த்தியின் கதையைப் பல இலக்கியங்களும் மேற்கோளாகக் காட்டுகின்றன. புறாவினை அடித்துக் கொல்லவந்த கழுகிற்கு

அப்புறாவின் எடைக்கு எடை தன் உடலில் இருந்து தசையை அரிந்து தருவதாக உறுதி மேற்கொண்ட சிபிச் சக்கரவர்த்தித் தன் உடலிலுள்ள உறுப்புக்களை அரிந்து தாராசுத் தட்டில் வைக்கத் தராசுத்தட்டின் மறுபக்கத்தில் இருந்த புறாவின் எடைக்கு ஈடாக அரசனின் தசை போதவில்லை. இறுதியாகத் தானே தாராசு தட்டின் ஒரு பக்கத்தில் ஏறி நிற்க, புறாவின் எடைக்கு ஈடாயிற்று. இக்கதையை நேர்மையாக வாழ்ந்த மன்னனின் நீதியைக் காட்டுவதாகப் பலர் கொண்டனர். கழுகிற்கு உணவு புறாவாகும். ஆனால், சிபிச் சக்கரவர்த்தி அதன் எடைக்கு ஈடாகத் தன் முழுஉடலையும் தந்தான் என்று அறியும் அவ்வரசனின் நீதியையும் நேர்மையையும் பலரும் பாராட்டுகின்றனர். ஆனால், உண்மை எது என்று ஆராய்ந்தால், பருந்தினால் துரத்தப்பட்ட புறா சிபிச் சக்கரவர்த்தியிடம் அடைக்கலமாகப் புகுந்தது. எனவே அடைக்கலப் பொருளைக் காப்பாற்றுவதற்காகவே அதன் எடைக்கு ஈடாகத் தன் உடல் முழுவதையுமே அளித்தான் என்ற உண்மை பலருக்கும் வியப்பை அளிக்கலாம்.

இதைப் போன்றதொரு பிறிதொரு நிகழ்ச்சியையும் கம்ப இராமாயணத்து அடைக்கலக் காதையுள் காணலாம். குழந்தைப் பேறின்றிப் பத்தாயிரம் ஆண்டுகள் வாழ்ந்த தசரதன் தன் மகனாகிய இராமனை விசுவாமித்திரர் கேட்டபொழுது உயிர் துறக்கும் நிலையை அடைந்தான் என்றாலும், இராமன் உயிர்க்குக் கேடுவராமல் காப்பாற்ற விசுவாமித்திரரிடம் வேண்டிக்கொண்டு இராமனை அடைக்கலமாகத் தந்தான்.

மேற்கூறிய நிகழ்ச்சிகள் போலக் கவுந்திஅடிகள் கோவலனையும் கண்ணகியையும் இடைக்குல மடந்தையாகிய மாதரியிடம் அடைக்கலமாகத் தந்துவிட்டுச் சென்றார். இடைக்குல மடந்தை கோவலன் கொலையுண்ட போது தன்னிடம் அடைக்கலமாகத் தந்த இருவருள் ஒருவர் வினையின் காரணமாகக் கொலையுண்ட போது, இடைக்குல மடந்தையாகிய நான் அடைக்கலம் இழந்தேன் என வருந்தி நள்ளிருளுள் எரியூட்டி அதில் வீழ்ந்து மாய்ந்து படுகிறாள். குன்றாக் கொள்கைக் கோவலன் இறந்துபட்டான் என நாம் பெரிதும் வருந்துகிறோம். கோவலனின் சீரிய வாழ்வு அவலத்தை உச்சநிலைக்குக் கொண்டு செல்கிறது. எனவே, *"அடைக்கலக்காதை"* சிலப்பதிகாரத்தில் உயிர்நிலைக் காதையாகக் கருதப்படும் சீர்மையை நிலைநாட்டுகிறது எனலாம்.

பெரியபுராணக் காப்பிய ஒருமை

7. அணைக்கு அடங்கா அன்பு வெள்ளம்

முனைவர். சுப. அண்ணாமலை

இறைப்பணியும் அடியார்பணியும் குறிப்பிட்ட கால அளவு செய்து அமைவன அல்ல. பெரியபுராணத் தொண்டர்கள், தாம் மேற்கொண்ட பணியை வாணாட் பணியாகச் செய்தோர். அதனை விடாப்பிடியாகச் செய்தமையே அவர்கள் சிறப்பு.

அவர்தம் மனவுறுதிக்குச் சோதனையாக நிகழும் தடைகள் இருவகை. ஒன்று, தாமே நிகழ்வது. இயற்கையை, மாந்தர் பண்பைச் சார்ந்தது. வறுமை, பற்று, பகை, அறம் போற்றுதல், உலகியல் முதலிய காரணங்களால் நிகழ்வது. மற்றொன்று, மனிதரால், இறைவனால் நிகழ்த்தப்படுவது. சமயச்சார்பு, சாதி ஏற்றத்தாழ்வுடைய சமூக அமைப்பு, இறைவன் சோதனை முதலிய காரணங்களால் தொண்டர்கள் எதிர்கொண்டது.

இதுவரை கண்ட தொண்டர்கட்கு நேர்ந்த தடை முதல்வகை. அடுத்துவரும் சில தொண்டர்கள், மாந்தர் அல்லது இறைவனால் தடுக்கப்பட்டும் கூட, தமது அன்பு அணைக்கடங்கா வெள்ளமாய்ப் பெருக, தம் பணியைத் தொடர்ந்து செய்வதை - அதில் புலப்படுத்தும் ஆன்மவீரத்தை - காண்கின்றோம். அவர்களின் வரலாறுகள் ஒருங்கே கூறப்படுதற்குக் காரணம், ஆன்மவீரத்தின் இக்கூறுபாடே.

அவர்களுள் ஒருவர் சமண சமயம் சார்ந்த அரசன் செய்த, தடையால் நிறுத்தமாட்டாத பணியின் தொடர்ச்சியை, தமது அன்பின் சாதனை ஆக்குகிறார்.

அந்தணத் தொண்டர் இருவர், வைதிக நெறியினராகிய தம் குலத்தோரின் எதிர்ப்பால் விளைந்த தடையைத் துணிந்து மீறி, ஆகமநெறியில் சிவபெருமானை வழிபட்டுத் தமிழ்ப் பண்பாட்டு மறுமலர்ச்சிக்குச் சான்று பகர்ந்தனர். புலையராய்ப் பிறந்த ஒருவர், தமது சாதியிழிவு பற்றிய தம் கருத்தே தம்மைத் தடைசெய்ய, கோயிலினுள் செல்லாவிடினும், புறத்தே இருந்து செய்யக்கூடிய பணிகளைத் தொடர்ந்து

செய்தார். தில்லை மன்றைக் கும்பிட விரும்பிய மனத்தை "நாளைப் போவேன்" என்றே பலகாலம் தொடர்ந்து கூறி, காணும் அன்பு எல்லை கடந்து பெருகிய போது தில்லையின் எல்லையிலேயே இரவுபகல் வலம் வந்து தவமிருந்து, இறைவனருளுக்கு இலக்கானார். மற்றொரு தொண்டர், அடியார்களின் குறிப்பறிந்து ஆடையொலித்துக் கொடுத்தவர். இறைவனின் சோதனையால், பெருமழையால் அப்பணி தடைப்பட, துவைகல்லில் தம் தலையை மோதியவர். இன்னொருவர், அந்தணர் குலத்து இளைஞர், சிவலிங்கத்தை வழிபடும் முழுப்பூசனைக்கும் வைதீக அந்தணர்களின் எதிர்ப்பு, தம் தந்தையின் வாயிலாக - அபிடேகப் பாற்குடத்தை அவர் தம் காலினால் எற்றுவதன் வாயிலாக - வெளிப்பட, அத்தடையினால் பூசைத் தொடர்ச்சி கெடாதவாறு, தந்தையின் காலை வெட்டினார்.

இவ்வாறு, தொண்டர்கள் எதிர்கொண்ட தடைகள் என்னும் உடையா அணையை மீறி எழுந்து பெருகியது அவர்களின் அன்பு வெள்ளம்.

அவர்களுள் மூர்த்தியார் மதுரையைச் சேர்ந்த வணிகர். உலகப் பற்றுக்களை அறவே விடுத்துச் சிவபெருமான் திருவடியையே சார்பாகவும் துணையாகவும் குறிக்கோளாகவும் கொண்டவர். அப்பெருமானிடம் நாளும் பெருகும் அன்பினர். திருக்கோயிலில் சிவலிங்கத் திருமேனிக்குச் சந்தனம் அரைத்துக் காப்புச் சாத்தும் பணியை மேற்கொண்டார். அந்நிலையில், பாண்டிய நாட்டைக் கைப்பற்றிய கருநாடக மன்னன், சமணசமயம் சார்ந்து, சிவனடியாரையும், திருவாலவாய்க் கோயில் தொண்டர்களையும் மூர்த்தியாரையும் பலவாறு துன்புறுத்தினான். சந்தனக் கட்டை எங்கும் கிடைக்காதவாறு செய்தான், பகலெல்லாம் அதற்கென அலைந்த மூர்த்தியார், மாலையில் வெறுங்கையோடு கோயிலுக்குச் சென்றார். அன்று பெருமானுக்குச் சந்தனக்காப்பு சாத்திப் பார்க்கவில்லையே என்ற ஏக்கம் அவர் உள்ளத்தில் மீதூர்ந்தது. தமது பணித்தொடர்ச்சி நின்றதைப் பொறாது, '*அரைக்கும் கட்டை தானே கிட்டவில்லை? கை உள்ளதன்றோ?*' என்று தமது முழங்கையைக் கல்லில் வைத்துத்

தேய்த்தார். இறைவன் திருவுள்ளம் பொறுக்கவில்லை. எழுந்தது வான்ஒலி, *'அன்பின் துணிவால் இவ்வாறு செய்யாதீர். உமக்குத் தீங்குசெய்த அரசை, நீர் ஆண்டு மக்கள் துன்பம் தீர்த்து உம் பணி செய்க'* என்றது ஒரு குரல்.

அரசப் பொறுப்பை மேற்கொண்டார். ஆயினும் அரசக்கோலம் சந்தனம் அரைக்கும் பணிக்குத் தடையாய் நிற்கக்கூடும் என்று, சடைமுடியும், திருநீறும், கண்மணி மாலையும் ஆகிய தொண்டர் கோலத்தை விடாமலே அரசு செலுத்தி, ஆலயப் பணியும் தொடர்ந்து செய்தார்.

ஆகம நெறியில் இறையுருவத்தை அணி செய்தலாகிய சந்தனக் காப்புப் பணியைச் செய்த மூர்த்தியார் வரலாறு முதற்கண் கூறப்படுகின்றது. இவ்வழிபாட்டின் ஏனைய உறுப்புகள், தொடர்ந்துவரும் வரலாறுகளில் இடம்பெறுகின்றன.

திருஞானசம்பந்தர் கி.பி. 7ஆம் நூற்றாண்டினர். அவருக்கு முன், 5ஆம் நூற்றாண்டு அளவில், வைதீக நெறி-தமிழ்நெறிக் கலப்பு நிறைவுபெற்றுச் சைவ சமயம் நிறுவனச் சமயமாக வளர்ச்சி பெற்றது. தமிழ் நெறி ஆகமங்களில் வடமொழியில் கூறப்பட்டது. இருநெறிக் கலப்பினை உளங்கொண்டு, வேதம், ஆகமம் இரண்டும் மெய்ந்நூல் ; அவை இறைவன் கூறியன. அவற்றுள் வேதம் பொது, ஆகமம், சிறப்பு. அவற்றின் முடிவுகள் வேறு வேறு என்பர். ஆயினும் பெரியோர் வேறுபாடு அற்றன என்றே கொள்வர் என்பார் திருமூலர் (2397). இருநெறிக் கலப்பினை ஏற்காத சிலரும் அக்காலத்தில் இருந்தமையை இப்பாடல் குறிப்பிடுகிறது. அவ்வகையில் சிவபெருமானுக்குரிய ஆகமநெறி வழிபாடாகிய அபிஷேகம், மலர் தூவுதல், மாலை சூட்டுதல், ஏத்துதல், உணவை நீர்தூவிப் படைத்தல் ஆகியவற்றை ஏற்காது, யாகம் செய்து தேவர்களை வணங்குதலையே மேற்கொண்ட வைதீக அந்தணர்கள் இருந்தனர். அடுத்துப் போற்றப்படும் முருகனார் அவர்களின் மரபில் தோன்றியவர்.

அவர் திருப்புகலூர்க் கோயிலில் சிவபெருமானுக்கு *"நிறை அன்பால் உருகும் மனத்தராய்"*, புலர் காலையில் ஈரம்புலரா

ஆடையுடன் பல்வகை மலர்கள் பறித்து, வகை வகையாய் மாலைகள் தொடுத்து, முப்போதும் சூட்டி, முழுப்பூசையும் ஆகமவழியில் செய்தலையும் தம் சமகாலத்துச் சமயகுரவர். திருஞானசம்பந்தருக்கு உயிர் நண்பராய், அவர் தமிழ் மறுமலர்ச்சியாகப் பரப்பிய *பதிகப்பெருவழியை* மேற்கொண்டு பெருமான் திருமுன் பதிகம் பாடியும், பதிகங்களின் உள்ளுறையான திருவைந்தெழுத்தைப் பயின்றோதியும் வழிபடுதலையும் வாணாட் பணியாகக் கொண்டார். புகலூரை வருணிக்கும் சேக்கிழார், '*மலரிதழ் மட்டுமல்ல! பூவைகளின் (ஒரு பறவை) வாயும் பதிகம் ஆகிய தேனைப் பொழியும்*' என்கின்றார்.

"வண்ண மதுரத் தேன்பொழிய
வாச மலர்வா யே அல்ல ;

....

மடமென் சாரிகையின்
பண்ணின் கிளவி மணிவாயும்
பதிகச் செழுந்தேன் பொழியுமால்"

இவ்வாறு ஊர்முழுதும் திருஞானசம்பந்தரின் பதிகத் தமிழ்மணம் கமழச் செய்தார் முருகனார் என நாம் உய்த்துணரலாம். அவர் செய்துவந்த ஆகமவழிப் பூசனையை, அவரது மரபினர் தடைசெய்தனர் என்ற குறிப்பு அவர் வரலாற்றில் இல்லை. ஆனால், திருஞானசம்பந்தர் தமக்கு உபநயனச்சடங்கு செய்த அந்தணருக்கு வேதமுதல்வன் சிவபெருமானே என்றும் அனைத்து வேதமந்திரங்கட்கும் முதல் (அடிப்படை) திருவைந்தெழுத்தே என்றும் கூறியதையும், முருகனார் அவரோடு நட்புக்கொண்டிருந்தார் என்பதையும் உளங்கொண்டு சிந்தித்தால், முருகனாரின் ஆகமநெறி வழிபாட்டிற்கு வைதீகரின் தடை இருந்தது என்பதை உய்த்துணரலாம். அதனால் தான் அவ்வழிபாட்டை வாணாட் பணியாக அவர் செய்தமை அரிய செயலாகப் போற்றப்பெறுகிறது. மலர் தூவுதலை மட்டுமின்றி, முழுப்பூசையையும் அருச்சனை என்றே சேக்கிழார் இங்குக் கூறுவதும் மற்றொரு குறிப்பிடத்தக்க செய்தி. இக்குறிப்பைக் கொண்டு சுந்தரரைப் பற்றிய '*தடுத்தாட்கொண்ட புராணத்தில்*' '*அருச்சனை பாட்டே யாகும்*'' என்று அவர் கூறுவதற்குப் பதிகம் பாடுதலே சிறந்த வழிபாடாகும் எனப் பொருள் கொள்ளலாம்.

அடுத்துப் போற்றப்படும் உருத்திர பசுபதியார் சோணாட்டுப் பெருந்திருத்தலையூரைச் சேர்ந்தவர். அந்தணத் தொண்டர். சிவபெருமானுக்கு அவர் அன்பு, அவரது மறைப்பயிற்சியால், யசுர் வேதசாகையில் உள்ள '*ஸ்ரீருத்ர*' (உருத்திரம்) மந்திரத்தை இடையறாது பயின்றோத (செபிக்க) வேண்டும் என்ற விருப்பமாக எழுந்தது.

வைதிக நெறி அந்தணர் யாகத்தீ வளர்த்து, உருத்திரனை (முத்தொழிலோருள் ஒருவன்) உருத்திர மந்திரத்தால் ஏத்தி, அக்கினியில், அவனுக்கும் படையற் பொருள்களைச் சொரிவர். பசுபதியாரோ அதற்கு மாறாக '*உருத்திர மந்திர முதல்வன் சிவபெருமானே*' எனக் கொண்டு, ஆகமநெறியில் சிவலிங்கப் பெருமானுக்கு நீராட்டுவது போலத் தாமே நீர்நிலையில், கழுத்தளவு நீரில் நின்று, இருகையும் உச்சிமேற் கூப்பி, உளமும் குவிந்து, இரவு பகலாக உருத்திர மந்திரம் பயின்றோதினார். அத்தொடர் பணியால் இறைவன் அருளைப் பெற்றார்.

முருகனார் ஆகமநெறியில் முழுவழிபாடும் செய்ய, பசுபதியார் உருத்திரம் ஓதல் ஒன்றே செய்யக் காண்கிறோம். இதுகொண்டு, அதுவே வழிபாட்டின் பயனைத் தந்தது என அறியலாம். இதற்குக் காரணம் யாது?

> *"வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது*
> *ஓதுவார்தமை நன்னெறிக்கு உய்ப்பது"*

என்று திருஞானசம்பந்தர், இறைவனின் திருப்பெயராகிய திருவைந்தெழுத்து, ஓதுதல்தான் வேதங்களின் உண்மைப் பொருள் என்றும், அதுவே முத்தியளிக்கும் என்றும் கூறினார். திருவைந்தெழுத்து மறைபொருளாக வேதம் முழுதும் இருப்பினும், அதாவது ஒவ்வொரு வேத மந்திரமும் திருவைந்தெழுத்தை விதையாக உடையதெனினும், யசுர் வேதத்தில், உருத்திரம் என்ற மந்திரக் கோவையில் "*நமசிவாய சிவதராயச*" என அது இடம் பெறுகிறது.

உருத்திரத்தின் இச்சிறப்பை அறிந்து ஆகமநெறி வழிபாட்டின்படி அதனை ஓதிச் சிவபெருமானை வழிபட்ட பசுபதியாரை, உருத்திரம் ஓதி யாகம் செய்து தேவர்களை வழிபட்ட வைதீக அந்தணர்கள் தடைசெய்திருப்பர் என்பதில் ஐயமில்லை. அவ்வாறு தம் மரபினரே தடுத்தும், அவர் தமது பணியை விடாது செய்தார். அது

பற்றியே நம்பியாரூரர், முருகனாரை அடுத்துப் பசுபதியாரைப் போற்றினார். திருவைந்தெழுத்தை ஓதியமையால் ஆனாயர்க்குப் போல, இவ்விருவர்க்கும் சோதனை ஏதும் நிகழவில்லை.

அடுத்துப் போற்றப்படுபவர் நாளைப் போவார். அவருக்கு வழங்கப்பட்ட பெயர் இது. அவர் இயற்பெயர் நந்தனார். சிவபக்தி மிக்க அவர் தில்லைக்குச் சென்று, கூத்தப் பெருமானைக் கும்பிட விரும்பி, சமுதாயம் தம்மை இழிந்த சாதி என ஒதுக்கியமையால், அந்த மரபுணர்ச்சி மனத்தில் ஆழப் பதிந்தமையால், தில்லைக் கோயிலினுள் செல்லவியலாமை பற்றி, தம் விருப்பத்தைத் தாமே தடுத்து, மனத்திற்கு ஆறுதலாக, "*நாளைப்போவேன்*" என்று நாள்தோறும் கூறிவந்தார். அத்தொடர் புலப்படுத்தும் துன்பஉணர்வு, அதையே அவருக்குப் பெயராக ஊராரைச் சொல்லவைத்தது. அவரது உடல் தில்லைக்குச் செல்ல இயலவில்லை. ஆனால் உள்ளம் சென்றுவிட்டது. திருப்புனலூர் என்ற தலத்தில், கோயிலுக்கு வெளியே நின்று கும்பிடுவோர்க்குச் சிவலிங்கப் பெருமானை நந்தி மறைத்தது. நந்தனாரின் ஆர்வம் பெருகியதை அறிந்த இறைவன், நந்தியைச் சிறிது விலகச் செய்தார்.

இறைவனுக்குச் சாதி வேறுபாடு இல்லை. திண்ணனார் என்ற வேடன், தம்மைத் தழுவி உச்சி மோப்ப இடமளித்தவர் தாமே அவர்! ஆனால் இங்கு நந்தனாரின் மனநிலை வேறு! ஆலயத்துள் செல்ல அவர் மனமே இடம் தராது!.

சிலநாளில் அந்த மனநிலை சற்று மாற, தில்லைக்குச் செல்லும் ஆர்வம் கரைகடந்து பெருகியது. மானிடப்பிறவி வீணாகின்றதே ; இது உள்ளபோதே பிறவிப்பிணியை நீக்க வேண்டுமே என்று, ஊரில் இருப்புக் கொள்ளாமல், தில்லை சேர்ந்து ஊரினுள் புக அஞ்சி எல்லையிலேயே இரவு பகலாக வலம் வந்தார். ஊரினுட் சென்று கோயிலினுள் பொன்னம்பலத்தில் ஆடும் பெருமானை வணங்குவதற்குத் தமது சாதியிழிவு தடையாயிற்றே என்று நினைத்துத் தவங்கிடந்தார். இவ்வாறு தொடர்ந்து தில்லைப் பெருமானை நினைந்தமையே அவர் சிறப்பு.

அதன்பிறகு நடந்தவை பற்றி யாதும் அறியப்படவில்லை. சேக்கிழார் பாடுபவை, பௌராணிக மரபில் வளர்ந்த நிகழ்ச்சியே ஆகும். அது வரலாறு அன்று.

நந்தனாரின் ஆன்மா தூயது. அன்பு மயமாகிய அதனை இறைவன் ஏற்றுக்கொண்டு, நிறைநிலை அளித்தான் என்பதை அப்பெளராணிகக் கதை உணர்த்துகின்றது.

அடுத்து வருபவர் திருக்குறிப்புத்தொண்டர். காஞ்சியில் வாழ்ந்த சலவைத் தொழிலாளர். இறையன்பு மிகுதியால் மனம், மொழி, மெய்கள் மூன்றாலும் இறைவனையே சார்ந்தவர். அச்சார்பால், சிவனடியார் மெய்யுணர்வால் திருவருள் எய்தி, அதன் வாயிலாகக் கொள்ளும் கருத்துக்களைக் குறிப்பால் அறிந்துகொள்வார். அதாவது அருளுக்கு இலக்கான அடியாரின் உள்ளத்தைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் இத்தொண்டருக்கு இருந்தது.

ஒரு பனிக்காலத்துக் காலை நேரத்தில், முதிய, ஏழைச் சிவனடியாராக இறைவன் அவரிடம் வந்தான். உடம்பில் வெண்ணீறு. கருமேகமென அழுக்கேறிய ஆடை. அவரை வரவேற்ற தொண்டர் அந்த ஆடையினைத் துவைப்பதற்காகக் கேட்க, முதியவர், "*இதில் இலேசில் நீக்க இயலாதவாறு அழுக்கேறியுள்ளது. ஆயினும் குளிருக்கு அஞ்சி நான் இதனைக் கைவிடாமல் இருக்கிறேன். சூரியன் மறையுமுன் துவைத்துக் கொண்டு வாரும்*" என்று கூறி, அவிழ்த்தளித்துச் சென்றார்.

துவைக்கச் சென்றார் தொண்டர். சோதனையால் பெருமழை பொழிந்தது. புழுங்க வைத்த கந்தையைப் பிரித்துத் துவைக்கவும் உலர்த்தவும் இயலவில்லை. விடாத மழையால், குளிரால் முதிய அடியவரின் உடம்பு துன்புறுவதற்குக் காரணமானேன் என்று, துவைக்க முடியவில்லை ; துவைக்கும் கல் உள்ளதன்றோ என்று, தமது தலையை அக்கல்லில் மோதிக்கொண்டார். பாறையினின்றும் ஒரு கை இறைவனது கை நீண்டு, அவரது தலையைப் பிடித்து நிறுத்தியது.

புறச்சமயத்தின் அரசனாலும், சொந்தக் குலத்தினராலும் தொண்டிற்கு இடையூறாகத் தடுக்கப்பட்ட தொண்டர்களின் வரலாற்றை அடுத்து, இறைவனால், சோதனைக்காகத் தடுக்கப்பட்ட தொண்டரின் வரலாறு, ஒப்புமை நோக்கி உடன் வைக்கப்பட்டது.

அடுத்துப் போற்றப்படுபவர் சண்டேசுரர். இவர் இயற்பெயர் விசாரசருமர். சேய்ஞலூரில் மறையவர் குலத்தைச் சேர்ந்தவர். அக்குலமறையோர் திருநீறு அணிவோராயினும் ஆகமவழியில் சிவபெருமானை வழிபட்டவர் அல்லர். வைதீக நெறியில் யாகம் செய்து தேவர்களை வழிபட்டோர். அவ்வூரில் பசுக்களின் பால் யாகச் சடங்கிற்குப் பயன்பட்டது என்பதை, "*தீம்பால் ஒழுகப் பொழுதுதொறும் ஓமதேனுச் செல்வனவும் .... மறுகு பலவும் உள*" என்று கூறுவதால், சேக்கிழார் இதனைக் குறிப்பாக உணர்த்துகின்றார். ஆகமநெறி வழிபாட்டினராயின் திருமஞ்சனம் ஐந்தும் (பஞ்ச கவ்வியம் ; ஆனைந்து) தரும் ஆனினம் செல்லும் மறுகு எனக் கூறியிருப்பார்.

அத்தகைய மறையோரின் குலத்தில் "*மறையின் துறை விளங்க, சைவ வாய்மை வளர*" விசாரசருமர் தோன்றினார் எனச் சேக்கிழார், சண்டேசுரரின் தொண்டு, அவரது குலவழக்கிற்கு மாறாக, வேதநெறி ஆகம நெறிகளின் கலப்பினால் சைவநெறி பெற்ற வளர்ச்சியாக அமைந்தமையை எடுத்துக்கூறுகின்றார்.

விசாரசருமருக்கு ஐந்தாண்டு நிறைவுற்றபோது, பெற்றோர் செய்வித்த உபநயனச் சடங்கின் பின், அவருக்கு வேதம் பயிற்றியபோது, முற்பிறவியில் பயின்ற ஆகம உணர்வும் அவரிடம் சிறந்து தோன்றியது. அதனால் ஆன்மாவை ஆளும் தலைவன் - உடையவன் - சிவன் என்ற மெய்யுணர்வு தோன்றியது. அதன்வழி, சிவபெருமானிடம் பேரன்பு பூண்டார்.

ஒரு நாள் பசுக்களை மேய்க்கும் ஆயனை ஒரு பசு கொம்பினால் முட்ட, அவன் அதனைக் கோல்கொண்டு புடைத்தான். அதனைக் காணப்பெறாத விசார சருமர் பசுக்கள் சிவலிங்க பூசையில் திருமஞ்சனம் செய்ய பால், முதலிய பஞ்சகவ்வியங்கள் சுரந்து தருதலை நினைத்து, அவற்றின் பெருமையை உளங்கொண்டு, அவற்றை மேய்த்தலே சிவவழிபாடு என முடிவுசெய்தார்.

ஊர் மறையோரின், இசைவு பெற்றுத் தாமே பசுக்களை மேய்க்கத் தொடங்கினார். அவரது அன்பான மேற்பார்வையில் பசுக்கள் நன்கு புல்லும் நீரும் அருந்தி, நிழலில் ஒய்வுகொண்டு மகிழ்ந்தமையால்

மிகுதியாகப் பால் சுரந்தன. தம் கன்றுகளைப் பிரிந்து மேய்ச்சல்புலத்திற்கு வரினும், விசாரசருமரின் அருகில் வந்து, அன்பால் உருகித் தாய்மையுணர்வு தோன்ற, தாமே பாலைச் சொரிந்தன. அதைக் கண்ட அவர் சிவலிங்க வழிபாட்டில் திருமஞ்சனத்தை நினைவுகூர்ந்து, ஆற்றின் இடையே, மணல் திட்டில் ஓர் ஆத்திமர நிழலில் மணலால் இலிங்கமும் ஆலயமும் அமைத்து, பூக்குடலையில் மலர்களும், குடங்களில் பசுக்கள் தாமே சுமந்த பாலும் கொண்டு, விளையாட்டாய்ப் பெருமானுக்குத் திருப்பள்ளித் தாமம் சாத்தி, திருமஞ்சனமாட்டினார். முற்பிறவித் தொடர்பால் பேரன்புடன் முழு வழிபாடும் முறைப்படி செய்தார். அங்குக் கிடைக்காத திரவியங்களையும் கிரியைகளையும் மனத்தால் நினைத்து நிரப்பினார். பசுக்கள் மனைக்கு மீண்ட பின்னும் நிரம்பப் பாலை வழங்கின.

இவ்வாறு சில நாள் நிகழ்ந்தது. பின்னர் ஒரு நாள் அதனைக் கண்ட அதன் தன்மை அறியாத அயலான் ஒருவன், ஊர்மறையோர்களிடம் தெரிவித்தான். அவர்கள் ஊரவையில் முறையிட அவையோர் அது இன்னதென ஆராயாமல், விசாரசருமரின் தந்தை எச்சதத்தனை அழைப்பித்து, "*உன் மகன் செய்யும் தீங்கைக் கேள்*" என்று, "மறையோர் ஆகுதிக்குக் கறக்கும் பசுக்களை எல்லாம் அன்புடன் மேய்ப்பவன் போல் ஒருங்கே கொண்டுபோய், ஆற்று மணலில் கறந்து பாலை வீணாக்கி, மனம் போனவாறு செய்கின்றான் என ஒருவன் கூறினான்" என்றனர்.

முன்பு வேதங்களை எல்லாம் ஓதுவிக்கும் முன்னம், நன்குணர்ந்த விசாரசருமரின் உணர்வு மிகுதி கண்டு மகிழ்ந்தவர்களாகிய மறையோர் அவர் மனம் போனவாறு செய்யார் எனவும், அவரது செயலை ஆராய்ந்தே முடிவு செய்யவேண்டும் எனவும் எண்ணாது, அது தீங்கு என்றே கருதிவிட்டனர். அது கேட்டு அஞ்சிய எச்சதத்தன் மகன் சார்பில் மன்னிப்புக் கேட்டு, மறுநாள் மகன் ஆவினம் மேய்க்கச் சென்றபோது, அவன் அறியாமல் தொடர்ந்து சென்று, ஒரு மரத்தில் ஏறி மறைந்திருந்து மகன் நிகழ்த்திய வழிபாட்டை, பால் அபிடேகத்தைப் பார்த்தான். அது ஆகமவழிப் பூசை என அவனுக்குத் தோன்றவில்லை. பாலை யாகத்திற்கு உதவாதவாறு மணலில் கறந்து வீணாக்குவதாகவே தோன்றியது. சினம்

மிகுந்து, தன் கைக்கோலினால் மகன் முதுகில் அடித்து, வசைமொழி கூறினான். வழிபாட்டில் வைத்த ஒருமையுணர்வால் விசாரசருமர் அவ்வலியை - வசையை உணரவில்லை. அபிடேகத்தை நிறுத்தவில்லை. எச்சதத்தனின் கோபம் பெருகி, அபிடேகத்திற்கு உள்ள பாற்குடத்தைக் காலால் எற்றினான். வழிபாடு இடையீடுபட்டது. இடையீடு செய்தவர் தந்தை என அறிந்தார் விசாரசருமர். சிவாபராதம் செய்தாரைத் தண்டித்தல் சைவநீதி. அதை நினைத்து, அங்கே கிடந்த ஒரு கோலை எடுத்துத் தந்தையின் இரண்டு கால்களின் மீதும் வீசினார். அவை முறிந்து விழுந்தான் தந்தை.

சிவப்பணியில் தந்தைப் பாசத்தையும் வென்ற விசாரசருமர்க்குச் சிவபெருமான், தாமே தந்தை என்னும் உறவினை வழங்கி, வழிபாட்டில் தாம் பெற்ற மாலையைச் சூடிக்கொள்ளும் பதவியையும் (சண்டேசுரர் பதவி) நல்கினார்.

விசாரசருமர் தமது வழிபாட்டுத் தொடர்ச்சிக்கு நேர்ந்த இடையூற்றை, அது தம் தந்தையால் நேர்ந்தது என அறிந்து, தந்தை என்றும் பாராமல் தண்டித்த மனவுறுதியால் - தந்தை விளைத்த தடையையும் கடந்து பெருகிய அன்பினால், மூர்த்தியார் முதலிய தொண்டர்களோடு ஒருங்கு வைக்கப்பட்டார். அவரது வரலாறு, வைதீக நெறியினராகிய மறையோர், அவரது வழிபாட்டினை நேரே தடுக்காவிடினும், '*ஆகம அபிடேகத்தை*' மணலில் ஊற்றி வீணாக்குவது என இழித்துக்கூறி, எச்சதத்தனுக்குச் சினம் உண்டாக்கி ஆகமப்பூசை நெறிக்கு மாறுபட நின்றமையை எடுத்துக்காட்டுகின்றது. இவ்வகையில், முருகனார், பசுபதியார், சண்டேசுரர் ஆகிய மூவர் வரலாறும் ஒருங்குவைத்து எண்ணத்தக்கவை.

செந்தமிழ் இதழ் ஆண்டுக் கட்டணம் முடிவுற்ற அன்பர்கள் பேரன்பு கொண்டு உருபா. 60/-ஐச் செலுத்திப் புதுப்பிக்க வேண்டுகிறோம்.

- ஆசிரியர்

மொழிக் குடும்பங்களும் மொழி வகைகளும்

முனைவர் இரா. கோதண்டராமன்,
தொல்காப்பியர் அடிப்படை ஆய்வு மையம்,
புதுச்சேரி-605 008.

1.0 இரு வகைப் பிரிவுகள்

1.1 சில மனிதர்களின் முகச் சாயல்கள், பேச்சு முறை, அங்க அசைவுகள் ஒன்றுபோல இருப்பதை நாம் நடைமுறையில் பார்க்கின்றோம். இத்தகையவர்களைப் பார்க்கும்போது பிறப்பு அடிப்படையிலான உறவு முறையில் ஒரு குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருப்பார்களோ என்று நினைக்கத் தோன்றும். சில சமயங்களில் இது உண்மையாகவே அமைந்துவிடலாம். இங்கே சில தனி மனிதர்களிடம் காணப்படும் ஒற்றுமைக் கூறுகள் ஒரு குடும்பத்துக்கு உரிய பண்புகளாய் வழிவழியாகப் பிறப்பு அடிப்படையில் தொடர்ந்து நிகழ்வனவாகும். ஆனால், இந்த ஒற்றுமைக் கூறுகள் எப்போதும் பிறப்பின் அடிப்படையில் அமையவேண்டும் என்ற நியதியில்லை. ஒருவரைப் பார்க்கும்போது அவர் இன்னாரைப் போலவே இருக்கிறார் என்று நினைக்கத் தோன்றும். அவரை அணுகி *"நீங்கள் இன்னாருக்கு எந்த வகையிலாவது உறவினரா?"* என்று கேட்டால், நாம் குறிப்பிட்ட அந்த இன்னாரைத் தனக்குத் தெரியவே தெரியாது என்று அவர் கூறிவிடுவார். இதில் இரண்டு உண்மைகள் உள்ளன. ஒன்று அந்த இன்னார் நாம் கேட்டவருக்கு உண்மையிலேயே உறவாக இருக்கக்கூடும். ஆனால் தலைமுறை இடைவெளியாலும், குடும்பக் கிளைகளின் வரலாறு தெரியாமற் போனதாலும் நாம் கேட்டவர் அந்த இன்னாருக்குத் தாம் உறவு என்ற உண்மை மறந்து போயிருக்கும். சிறிது முயன்றால் இந்த இருவருக்கும் உள்ள ஒற்றுமைக் கூறுகள் பிறப்பியல் அடிப்படையிலானவை என்பதை மெய்ப்பித்துவிடலாம். இது ஒருநிலை. இன்னொரு நிலையில் அந்த இருவருக்கும் இடையில் உள்ள ஒற்றுமைக் கூறுகள் பிறப்பியல் அடிப்படையில் அமையாமல் தற்செயலாக அமைந்ததாகவும் இருக்கலாம். இதனின்றும் ஒற்றுமைக் கூறுகளைப் பிறப்பியல் அடிப்படையில்

அமைந்தவை (Genetically Related Features) என்றும், தற்செயலாக அமைந்தவை (Typologically Related Features) என்றும் இரண்டு வகைகளாகக் கொள்ளலாம் என்றாகிறது.

1.2 மேலே நாம் குறிப்பிட்ட இரண்டு வகையான ஒற்றுமைக் கூறுகள் மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் மொழிகளுக்கும் பொருந்தும். பிறப்பியல் அடிப்படையிலும், தற்செயலாகவும் அமைந்த ஒற்றுமைக் கூறுகளைக் கருத்தில் கொண்டு மொழியியலார் உலக மொழிகளை வகைப்படுத்துவர். திராவிட மொழிகள், ஆரிய மொழிகள் என்ற வகைப்பாடு பிறப்பியல் அடிப்படையில் அமைந்ததாகும். அதாவது இந்த இரண்டு வகையான குடும்ப மொழிகளும் இருவேறு தொன் மொழிகளிலிருந்து (Proto Languages) கிளைத்தவை என்பது இதன் உட்கருத்தாகும். மொழிகளில் காணப்படும் ஒற்றுமைக் கூறுகள் பிறப்பு அடிப்படையில் அமைந்தவையாக இருந்தால் அந்த மொழிகளின் தோற்றத்துக்குக் காரணமாக இருந்த தொன்மொழியை மீட்டுருவாக்கம் செய்ய முடியும். தற்செயலான ஒற்றுமை கூறுகளைக் கொண்ட மொழிகள் இத்தகைய மீட்டுருவாக்கத்துக்குத் துணைபுரிவதில்லை.

2.0 எழுவாய் நிகழ்ச்சியும் மொழி வகைகளும்

2.1 தற்செயலான ஒற்றுமைக் கூறுகளைக் கொண்ட மொழிகளை அவற்றின் வாக்கிய அமைப்பைக் கருத்தில் கொண்டு மொழியியலார் பல பிரிவுகளாகப் பிரிப்பார்கள். எழுவாய்-செயப்படுபொருள்-பயனிலை என்ற வைப்பு முறையில் வாக்கிய அமைப்பைக் கொண்ட மொழிகள் ஒருவகை. ஆங்கிலத்தில் இத்தகைய மொழிகள் SOV அதாவது Subject-Object-Verb மொழிகள் என்று குறிக்கப்படும். தமிழ், இந்தி, ஜப்பானியம், கொரியம், மங்கோலியம், துருக்கியம், பர்மியம் முதலான மொழிகள் இந்த பிரிவில் அடங்கும்.

2.2 எழுவாய்-பயனிலை-செயப்படுபொருள் என்ற வைப்பு முறையில் வாக்கிய அமைப்புக்களைக் கொண்ட மொழிகள் இன்னொரு வகை. ஆங்கிலத்தில் இத்தகைய மொழிகள் SVO அதாவது Subject-Verb-Object மொழிகள் என்று குறிக்கப்பெறும். ஆங்கிலம், இத்தாலியம், மலாய், தாய், ஃபின்னியம் (Finnish), சீனம் முதலானவை இரண்டாம் பிரிவில் அமைந்த மொழிகளாகும்.

2.3 பயனிலை-எழுவாய்-செயப்படுபொருள் என்ற வைப்பு முறையில் வாக்கிய அமைப்புக்களைக் கொண்ட மொழிகள் மூன்றாவது வகை. ஆங்கிலத்தில் இத்தகைய மொழிகளை VSO அதாவது Verb-Subject-Object மொழிகள் என்று குறிக்கப்பெறும். ஐரியம் (Irish), எபிரேயம் (Hebrew), அராபியம் (Arabic), முதலான மொழிகள் மூன்றாம் பிரிவில் அமைந்த மொழிகளாகும்.

3.0 ஒப்பின்மையும் ஒப்புடைமையும்

3.1 பிறப்பியல் சாராத ஒற்றுமைக் கூறுகளின் மீது அமையும் இத்தகைய பாகுபாட்டினை ஆங்கிலத்தில் Typological Classfication என்பார்கள். தமிழில் இதனை ஒப்பில் ஒப்பு வகைப்பாடு என்று குறிப்பிடலாம். தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகியவற்றையோ இந்தி, மராத்தி, ஒரியா ஆகியவற்றையோ ஒப்பில் ஒப்பு வகைப்பாட்டுக்குரிய மொழிகளாகக் கொள்ள முடியாது. ஏனெனில் இவை பிறப்பு அடிப்படையிலான ஒற்றுமைக் கூறுகளைக் கொண்ட இருவேறு குடும்ப மொழிகளாகும். ஆனால், தமிழையும் ஜப்பானிய மொழியையும் ஒப்பில் ஒப்பு வகைப்பாட்டின் கீழ்க் கொண்டு வரலாம். ஏனெனில் ஒரே வகையான வாக்கிய அமைப்புக்களைக் கொண்ட இந்த இரண்டு மொழிகளும் பிறப்பு நிலையில் வெவ்வேறு குடும்பத்தைச் சேர்ந்தவையாகும். இவற்றைக் குடும்ப மொழிகளாகக் கொள்வதற்கான வாய்ப்பு பற்றியும் அண்மைக் காலத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் இந்த ஆய்வுகள் தொடரனியல் அடிப்படையில் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. ஒப்பில் ஒப்பு வகைப்பாட்டின் கீழ் தொகுக்கப்படும் மொழிகளின் வாக்கிய அமைப்புக்கள் மொழிகளின் பரிணாம வளர்ச்சியைப் புலப்படுத்துவதாக மொழியியலார் கருதுகின்றனர். இந்த வகையில் தமிழ், கொரியம், துருக்கியம் போன்ற மொழிகள் படிநிலை அல்லது பரிணாம வளர்ச்சியில் மூன்றாவது கட்டத்தை எட்டியவையாகக் கொள்ளப்படுகின்றன.

3.2 ஒப்பில் ஒப்பு வகைப்பாட்டின் அடிப்படையில் அமைந்த மொழிகளின் படிநிலை வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சிகள் இன்னும் முடிந்தபாடில்லை. படிநிலை வளர்ச்சிக் கோட்பாட்டிற்கு உட்பட்டு மொழிகளின் வளர்ச்சிப் போக்கு அமைவதை நாம் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள் அனைத்தும் சில வாக்கிய வகைகள் தவிர தமிழில் உள்ளது போன்ற வாக்கிய

அமைப்புக்களைக் கொண்டிருக்க மேற்படி மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த காஷ்மீரி மொழி மட்டும் ஆங்கிலத்தில் உள்ளது போன்ற வாக்கிய அமைப்பினைக் கொண்டுள்ளது. தமிழ் போன்ற வாக்கிய அமைப்பைக் கொண்ட ஆரிய மொழிகளில் கூட ஆம் / இல்லை என்ற விடைக்குரிய வினா வாக்கியங்களும், என்று / என, ஆக, போல் முதலான வாக்கியச் சாரியைகளை (Sentential Complementizers) ஈற்றில் கொண்ட சார்பு வாக்கிய வகைகளும் ஆங்கிலத்தில் உள்ளதுபோல் காணப்படுகின்றன. ஜெர்மானிய மொழியில் முற்றுவாக்கியமும் எச்சவாக்கியமும் பொருந்திய முற்றெச்ச வாக்கியத்தில் (Complex Sentence) முற்று வாக்கியம் (Simple or Finite Clause) ஆங்கிலத்தில் உள்ளது போன்ற வாக்கிய அமைப்பையும், எச்ச வாக்கியம் (Non Finite or Participial Clause) தமிழில் உள்ளது போன்ற வாக்கிய அமைப்பையும் கொண்டுள்ளன. இந்தோ ஐரோப்பிய மொழிகளின் தொன்மொழியானது தமிழில் உள்ளது போன்ற SOV வாக்கிய அமைப்பினைக் கொண்டதாகக் கருதப்படுகிறது. தமிழ் மொழியைப் பொருத்தவரையில் அதன் வாக்கிய அமைப்பு செயப்படுபொருள்-பயனிலை-எழுவாய் அதாவது OVS என்ற வைப்பு முறையிலிருந்து, எழுவாய்-செயப்படுபொருள்- பயனிலை அதாவது SOV என்ற வைப்பு முறையை நோக்கி வளர்ந்ததாகக் கருதலாம். அவை ***தாம், தத்தம் கிளவி அடுக்கந வரினும் எத்திறத் தானும் பெயர்முடி பினவே*** (சொல். எச்சவியல். சேனா.33) என்ற தொல்காப்பிய நூற்பாவின் மூலம் இச்செய்தி பெறப்படுகிறது. இந்த நூற்பாவில் அவைதாம் என்ற தொடர் பயனிலையாகச் செயல்படும் வினைமுற்றுக்களை உணர்த்துகிறது. இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு பார்க்கும்போது மொழிகளின் வளர்ச்சி ஒரு படிநிலைக் கோட்பாட்டின் கீழ் அமைந்துள்ளதாகவே கொள்ளத் தோன்றுகிறது.

4.0 பகு நிலை மொழிகளும் தொகு நிலை மொழிகளும்

4.1 பிறப்பியல் சாராத ஒற்றுமைக் கூறுகளின் அடிப்படையில் மொழிகள் இன்னொரு வகையாகவும் வகைப்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு மொழியிலும் காணப்படும் சொல்லமைப்பினைக் கருத்தில் கொண்டு தனிநிலை மொழிகள் (Isolating Languages) என்றும், பகுநிலை மொழிகள் (Analytic Languages) என்றும் தொகுநிலை மொழிகள் (Synthetic Languages) என்றும் மொழிகள் மூன்று வகைகளாகப் பகுக்கப்படுகின்றன. தனிநிலை மொழிகளில் சொல்லமைப்புக்கள் பகுதி, விகுதி என்ற முறையில்

அமைவதில்லை. விகுதிகள் அல்லது இடைச்சொற்கள் என்ற பேச்சுக்கு இத்தகைய மொழிகளில் இடமில்லை. தனிச்சொற்களே இடைச்சொற்களாகச் செயல்படும் போக்கு தனிநிலை மொழிகளில் காணப்படுகின்றது. சீனம், சமோவம், (Samovam) வியத்நாமியம், மேலும் சில தென்கிழக்கு ஆசிய மொழிகள் தனிநிலை மொழிகளாகக் கொள்ளத்தக்கவையாகும்.

4.2 பகுநிலை மொழிகளின் சொல்லமைப்புக்களைப் பகுதி, விகுதி என்று பிரித்து ஆராயமுடியும். இந்த மொழிகளில் விகுதிகளைத் தனிச் சொற்களாகக் கருத முடியாது. அவை தனித்தியங்கும் ஆற்றல் அற்றவை. தமிழ், துருக்கியம், கொரியம் முதலானவை இத்தகைய சொல்லமைப்புக்களைக் கொண்ட பகுநிலை மொழிகளாகும். பகுநிலைத் தன்மையானது தனிநிலைக்கு அடுத்த நிலையிலான படிநிலை வளர்ச்சியைக் குறிப்பதாகக் கருதலாம்.

4.3 தொகுநிலை மொழிகள் பகுதியும் இடைச்சொற்களும் பிரித்தறிய முடியாதவாறு அமைந்த சொல்லமைப்பினைக் கொண்டவையாகும். ஆங்கிலத்தில் உள்ள his, him, her முதலான சொற்கள் பகுதியாகவும், விகுதியாகவும் பிரித்து ஆராய முடியாத வகையில் தொகுநிலைத் தன்மையினைக் கொண்டவையாகும். அராபியம், இலத்தீன், பழைய கிரேக்கம், சமஸ்கிருதம் முதலானவை தொகுநிலை மொழிகளாகக் கருதப்படுகின்றன.

4.4 சொல்லமைப்புக்களின் படிநிலை வளர்ச்சியில் தனிநிலை மொழிகள் முதல் கட்டத்திலும், பகுநிலை மொழிகள் இரண்டாம் கட்டத்திலும், தொகுநிலை மொழிகள் மூன்றாம் கட்டத்திலும் இருப்பனவாகத் துணியலாம். சொல்லமைப்பின்கீழ் அமையும் தனிநிலை, பகுநிலைப் பாகுபாடுகள் மொழிகளின் தனித்தன்மையை முழுக்க முழுக்க வெளிப்படுத்துவதாகச் சொல்லமுடியாது. இலத்தீன், ஆங்கிலம் முதலிய மொழிகளில் தொகுநிலைப் பண்புடன் பகுநிலைப் பண்பும் காணப்படுகின்றது. இதேபோல் தமிழில் பகுநிலைப் பண்புடன் தொகுநிலைப் பண்பும் காணப்படுகின்றது. எ-டு என்ன (<என்+ அ), இல்லை (<இல்+ஐ), துன்பம் (<துன்பு+அம்), மையல்(<மை+அல்), பகுதிப்பொருள் விகுதியைக் கொண்ட தளவம் (<தளவு + அம்), புற்றம்(<புற்று + அம்), நெற்றம் (<நெற்று + அம்), வாலம்(<வால்+அம்),

வானம்(<வான்+அம்), உலகம் (<உலகு+அம்) நெஞ்சம் (<நெஞ்சு+அம்) முதலான பல சொற்கள் இதனை நன்கு தெளிவுபடுத்தும். இத்தகைய பகுநிலை-தொகுநிலைக் கலப்படம் மொழிகள் ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலையை நோக்கிச் செல்கின்றன என்ற உண்மையைப் புலப்படுத்துவதாக உள்ளது.

5.0 ஒப்பீட்டு மொழியியலின் தோற்றம்

5.1 ஒப்பில் ஒப்பு வகைப்பாட்டின் கீழ் ஒன்றுபடும் மொழிகளை முன்பே குறிப்பிட்டதுபோல் குடும்ப மொழிகள் என்று கொள்ளமுடியாது. பிறப்பியல் சார்ந்த ஒற்றுமைக் கூறுகளைக் கருத்தில் கொண்ட வகைப்படுத்தப்படும் மொழிகளே குடும்ப மொழிகளாகக் கொள்ளத் தக்கவை. பிறப்பியல் அடிப்படையில் மொழிகளை வகைப்படுத்துவது பற்றிய சிந்தனைக்கு முதன்முதலில் வித்திட்டவர் ஐரோப்பாவைச் சேர்ந்த சர். வில்லியம் ஜோன்ஸ் என்னும் வடமொழி அறிஞர் ஆவார். இவர் வெள்ளையர் ஆண்ட இந்தியாவில் நீதித் துறையில் பணியாற்றியவர். 1786-இல் இவர் ஆற்றிய ஒரு சொற்பொழிவில் வடமொழியானது இலத்தீன், கிரேக்கம் ஆகியவற்றின் ஒற்றுமைக் கூறுகளைக் கொண்டிருப்பதாகவும், இந்த ஒற்றுமைக் கூறுகள் பிறப்பியல் அடிப்படையிலானவை என்றும், இதனைக் கருத்தில் கொண்டு வடமொழி, இலத்தீன், கிரேக்கம் ஆகிய மூன்று மொழிகளும் ஒரு தொன்மொழியிலிருந்து கிளைத்திருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். வில்லியம் ஜோன்ஸின் இக்கூற்று ஐரோப்பிய மொழியியல் அறிஞர்களுக்குப் பெருவியப்பினையும், மொழியியல் ஆய்வில் ஓர் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தியது. அவருடைய கருதுகோள் முனைப்பாக எடுத்துக்கொள்ளப்பட்டு வடமொழி உள்ளிட்ட இந்தோ-ஐரோப்பிய மொழிகள் பிறப்பியல் அடிப்படையில் ஒரு குடும்பத்தைச் சார்ந்தவை என்ற உண்மை நிலைநாட்டப்பட்டது. மொழிகளைப் பிறப்பியல் அடிப்படையில் ஒப்பிட்டுத் தொல்வடிவங்களையும் (Proto Forms) அதன் அடிப்படையில் தொன்மொழிகளையும் மீட்டுருவாக்கம் செய்ய முடியும் என்ற சிந்தனைக்கு வழிகோலியவர் வில்லியம் ஜோன்ஸ் என்றால் மிகையாகாது. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் மொழிகளைப் பிறப்பியல் அடிப்படையில் வகைப்படுத்தும் முறையான ஆராய்ச்சிகள் வில்லியம் ஜோன்சுக்கு முன்னர் மேற்கொள்ளப்-படவில்லை. இவர் காலத்துக்கு முன்பு தமிழில் உள்ள *அழு. ஆள்*

(ஆளுதல்) ஆகிய வினைச்சொற்கள் ***யாழ், யாள்* ஆகிய மூல வடிவங்களின் திரிபுகள் என்று யாராவது சொல்ல முற்பட்டிருந்தால் அவரைச் சித்தம் கலங்கியவர் என்று ஒதுக்கித் தள்ளியிருப்பார்கள். ஆனால், இன்று நிலைமை வேறு. தமிழ் (அழு/ஆழ், ஆள் (ஆளுதல்), தெலுங்கு (ஏடுச்உ/ஏடுவு,ஏலு), ஆகிய மொழிகளை ஒப்பிடுகையில் ***அழு, ஆள்*** ஆகிய சொற்கள் ***யாழ், *யாள்** ஆகியவற்றின் திரிபுகள் என்ற செய்தியை மறுப்பதற்கில்லை.

5.2 பிறப்பியல் அடிப்படையில் ஒன்றுபடும் மொழிகள் எல்லா வகையிலும் ஒத்த இயல்புகளை உடையனவாக இருக்கும் என்று கூறமுடியாது. பெரும்பாலான திராவிட மொழிகளின் வினையமைப்புக்களில் எழுவாயுடன் பொருந்தும் இயைபு விகுதிகளின் (Agreement Markers) நிகழ்ச்சியைக் காணலாம். ஆனால் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மலயாளம் இதற்கு விதிவிலக்காக இருக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டு மலயாளம் காலப்போக்கில் இயைபு விகுதிகளை இழந்துவிட்டது என்று பலர் கருதுகின்றனர். ஆனால் அண்மைக்காலத்தில் இந்த ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் முடிவுகள் இயைபு விகுதிகள் மற்றும் பால் விகுதிகள் (Gender Markers) ***அற்ற செய்து, செய்யுந்நு, செய்யும்*** ஆகிய வாய்பாட்டு மலயாள வினைமுற்றுக்களே திராவிட மொழிகளின் தொன்மையான வினைமுற்றுக்கள் என்பதையும், பெரும்பாலான திராவிட மொழிகளில் முற்று வினைகளில் காணப்படும் இயைபு மற்றும் பால் விகுதிகள் பிந்திய வளர்ச்சி என்பதையும் புலப்படுத்துவனவாய் உள்ளன. இதேபோல் ஆரிய மொழிக் குடும்பத்திலும் வாக்கிய அமைப்பு முறையில் காஷ்மீரி மொழியானது ஏனைய ஆரிய மொழிகளின் வாக்கிய அமைப்பினின்றும் முரண்படுவதைக் காணமுடிகிறது. பிறப்பியல் அடிப்படையில் ஒன்றுபடும் மொழிகள்கூட தத்தமக்குள் அமைப்பில் மாறுபடுவதானது, மொழிகளின் படிநிலை வளர்ச்சியைத் தெளிவுபடுத்துவதாகவே தோன்றுகிறது.

5.3 பிறப்பியல் அடிப்படையில் மொழிகளுக்கிடையே காணப்படும் ஒற்றுமைக் கூறுகள் சில சமயங்களில் வேறுபட்ட குடும்பங்களைச் சேர்ந்த மொழிகளிலும் காணப்படலாம். இத்தகைய ஒற்றுமைக் கூறுகள் தற்செயலாக அமைந்தவையாக இருக்கலாம். அல்லது சொற்களும், அமைப்புக்களும் கடன் வாங்கப்பட்டதன் மூலம் அமைந்தவையாக இருக்கலாம். அல்லது வேறுபட்ட மொழிக்

குடும்பங்கள் என்று நாம் கருதுபவை ஒரு குறிப்பிட்ட தொன்மொழியிலிருந்து பிரிந்து பல்வேறு காரணங்களால் பெருவாரியான ஒற்றுமைக் கூறுகளை இழந்து, சில பொதுக்கூறுகளை எச்சங்களாகத் தக்க வைத்துக்கொண்டதால் அமைந்தவையாக இருக்கலாம். எனவே ஒற்றுமைக் கூறுகள், வேறுபட்ட மொழிக்குடும்பங்களில் இருப்பதைக் கருத்தில் கொண்டு உடனே இந்த மொழிக் குடும்பங்கள் பிறப்பியல் சார்ந்த உறவுக் குடும்பங்கள் என்றோ பிறப்பியல் அடிப்படையில் ஒன்றிலிருந்து ஒன்று தோன்றியது என்றோ கருத முடியாது. தமிழிலிருந்து வடமொழி தோன்றியது என்று வாதிப்போரும், வடமொழியிலிருந்தே திராவிட மொழிகள் தோன்றின என்று வாதிப்போரும் வேறுபட்ட மொழிக் குடும்பங்களில் காணப்படும் ஒற்றுமைக் கூறுகளுக்கு நாம் குறிப்பிட்ட காரணங்களில் எது பொருந்தும் என்பதை ஆராய்ந்து பார்க்காமலேயே தவறான கருதுகோள்களை வகுத்துக்கொண்டு அவற்றின் அடிப்படையில் இல்லாத ஊருக்குப் போகாத வழியைத் தேடிக்கொண்டிருக்கின்றனர். இத்தகைய கருதுகோள்களும் அவற்றின் அடியாக அமைந்த ஆய்வு முடிவுகளும் அறிவியல் தன்மையற்றவை என்று ஒதுக்கித் தள்ள வேண்டியவையாகும்.

5.4 மொழிக் குடும்பங்கள் என்று எடுத்துக்கொண்டால் திராவிட மொழிக் குடும்பமும், இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பமும் வேறுபட்ட மொழிக் குடும்பங்கள் என்பதை மறுப்பதற்கில்லை. இதேபோல் ஜப்பானிய மொழி சார்ந்த குடும்பமும் முற்றிலும் வேறுபட்டதாகும். ஆனால் இந்த உண்மைகளையும் மீறி அண்மைக் காலத்தில் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தமிழை ஜப்பானியத்தோடும் இந்தோ-ஐரோப்பியக் குடும்பத்தைச் சேர்ந்த ஆங்கிலத்தோடும் பிறப்பியல் அடிப்படையில் ஒன்றுபடுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த முயற்சிகள் எந்த அளவுக்குக் கோட்பாட்டு நிலையில் ஏற்புடையன என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

5.5 வடிவம் மற்றும் அமைதி ஆகியவற்றின் அடிப்படையில் சில தமிழ்ச் சொற்கள் ஆங்கிலத்துடன் ஒத்துப்போகும் நிலையைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்களில் காணலாம்.

விழை - wish	நரம்பு - Nerve	புர - protect
பரவு/பராவு - prayer	உரறு - roar	சரடு(தேலுங்கு—த்ராடு) - thread

தாங்கல்	- tank	குலை	- cluster	குழு	- group/crowd
குரை	- crow	பொரி	- fry	புரை	- bore
களி	- clay	வரை	- write	கீள் (தெலுங்கு—சீலு)	- Slit
கல் (கல்லுதல்)	- cull	உருள்	- roll		

இந்த எடுத்துக்காட்டுக்களை நோக்கும்போது தமிழும் ஆங்கிலமும் பிறப்பியல் அடிப்படையில் அமைந்த மொழிகளாக இருக்கக்கூடுமோ என்ற ஐயம் எழுவது இயல்பே. இருவேறு மொழிக் குடும்பங்களைச் சார்ந்த மொழிகளுக்கிடையில் பிறப்பியல் ஒற்றுமையை நிலைநாட்ட முற்படும்போது சொற்களின் வடிவம் அவற்றின் பொருண்மையை மட்டுமே கருத்தில் கொள்ள முடியாது. இந்த மொழிகளில் ஒற்றுமைக் கூறுகள் எந்தக் காரணத்தால் அமைந்துள்ளன என்பதை நன்கு ஆராய் வேண்டும். இத்தகைய மொழிகளில் காணப்படும் ஒற்றுமைக் கூறுகள் தற்செயலானவை அல்ல என்பதையும், அவை கடன் வாங்கப்பட்டதால் நேர்ந்தவை அல்ல என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும். தமிழிலும் ஆங்கிலத்திலும், தமிழிலும் ஜப்பானியத்திலும் காணப்படும் ஒற்றுமைக் கூறுகள் தற்செயலானவை அல்லது சொற்களைக் கடன் வாங்கியதால் நேர்ந்தவை என்றால் இந்த மொழிகளைப் பிறப்பியல் அடிப்படையில் ஒன்றுபடுத்த முயல்வதை அறிவியல் அடிப்படையில் அமைந்த முயற்சியாகக் கொள்வதற்கில்லை.

5.6 மொழிகளைப் பிறப்பியல் சார்ந்த ஒற்றுமைகளின் அடிப்படையில் ஒப்பீடு செய்து மொழிக் குடும்பங்களை வரையறை செய்யும் ஆராய்ச்சியானது மொழிகளின் வரலாற்றையும் வளர்ச்சிப் போக்கையும் புரிந்துகொள்ளப் பெரிதும் துணைபுரிந்துள்ளது என்பது என்னவோ உண்மைதான். ஆனால் இந்த ஆராய்ச்சியானது தமிழையும் ஆங்கிலத்தையும், தமிழையும் ஜப்பானியத்தையும் தூரத்து உறவு மொழிகளாகக் கொள்ளும் அளவுக்குக்கூட இன்னும் முதிர்ச்சி பெறவில்லை. வெறும் மொழியியல் பின்னணியைக் கொண்டு மட்டுமே இந்த ஆராய்ச்சியைத் தொடர முடியும் என்று தோன்றவில்லை. மனித இனங்கள் பல்வேறு காலகட்டங்களில் உலகின் பல்வேறு பகுதிகளில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மேற்கொண்ட குடிபெயர்ச்சிகளையும் நடமாட்டங்களையும் அறிந்து கொள்வது மொழிகளின் அமைப்பியல் ஒற்றுமையைப் புரிந்துகொள்ளப் பெரிதும் துணைபுரியும்.

மாணிக்கவாசகர் வாழ்வியலுக்குக் காட்டிய நெறிகள்

உ, கருப்பத்தேவன்,
பகுதி நேர முனைவர், பட்ட ஆய்வாளர்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 21.

முன்னுரை

மாணிக்கவாசகர் மக்களுக்கு உரைக்கும் சமயநெறி அறிவுறுத்தல்களாகத் திருவாசகப் பாடல்கள் அமையவில்லை. அவர் மக்களை நோக்கிக் கூறும் கூற்றாகச் சில பாடல்கள் காணப்படினும், திருவாசகத்தின் போக்கு மாணிக்கவாசகரின் சொந்த அனுபவ வெளிப்பாடாகவே காணப்படுகின்றது. ஆன்மஉணர்வால் அவர் பெற்ற அனுபவம், இறைக்கலப்பு அனுபவம் ஆகிய இருநிலைகளில் மாணிக்கவாசகரது மனம் போராடியும் மாறியும் துன்பப்பட்டும் வேதனையுற்றும் மெய்ம்மையை உணர்ந்தும், அன்பின் ஆழத்தைச் சிறிது சிறிதாக எட்டியும் கனிந்தும் உருகியும் நெகிழ்ந்தும் பல்வகை மாற்றங்களுக்கு உட்பட்டு, வளர்ந்து பக்குவப்பட்டு, உலகியல் நாட்டத்தை முற்றிலுமாக விட்டு நீங்கி, இறை நினைவாகவே - சிவமயமாகவே நின்றதைத் திருவாசகப் பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. அவற்றிலிருந்து வாழ்வியலின் விழுமிய நெறிகளையும் ஒழுகலாறுகளையும் நாம் அறிந்துகொள்ள முடிகின்றது.

ஆன்மீக யாத்திரை

மாணிக்கவாசகர் பெருந்துறையில் முதலில் பெற்ற உயிர் உணர்வுக் கிளர்ச்சியால், அவர் பல்வேறு சிவத்தலங்களுக்கும் ஆன்மீக யாத்திரையை மேற்கொண்டார். பெருந்துறையிலிருந்து இறுதியாகத் தில்லைக்கு அவர் மேற்கொண்ட பயணம் அவரது அக யாத்திரையின் புற வெளிப்பாடாகும். ஒவ்வொரு தலத்தையும் அடைந்து அவர் பெற்ற அகக்காட்சி அவரை ஆன்மீக வாழ்வின் வளர்ச்சி நிலைகளில் உயர்த்தியது. அந்தப் பயணம், அவர் இறைவனைக் கடப்பு நிலையில் காணப்புறப்பட்ட பயணமாகும். இவை அவரது சொந்த அனுபவங்களின் வெளிப்பாடாக அமைந்தவை. அவர் தம் வாழ்க்கை முறைகளால் சைவநெறியை விளக்கிக் காட்டியுள்ளார். அவர் அறிவுரைகளை மக்களுக்கு வழங்கவில்லை.

பெருந்துறைக் காட்சிக்குப் பின்

மாணிக்கவாசகர் பெருந்துறையில் தான் முதன்முதலில் இறைக்காட்சி பெறுகின்றார். அக்காட்சி அவருக்கு உயிர் உணர்வைத் தோற்றுவித்தது. அவர் உயிரினுள்ளே தோன்றி உள்ளத்திலும் பிரதிபலித்த சோதிக்காட்சி பின்பு மறைந்தது. அவரது பற்று நீக்கலின் அடையாளமாக மீண்டும் மதுரையில் அவருக்குள் எழுந்தது. மதுரையில் தோன்றி மறைந்த சோதிக்காட்சி, அவர் மீண்டும் பெருந்துறைக்குச சென்றபோது நெருப்பு வடிவமாக எழுந்தது.

ஆண்டான் அங்குஓர் அருள்வழி இருப்பத்
தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்

மாணிக்கவாசகர் சோதி வடிவத்தைய முதலிற் கண்டார் என்பதற்கு அவர் திருப்பெருந்துறையில் பாடிய அருட்பத்தில் எனக்கு வெளிப்படவேண்டும் என இரந்து வேண்டியவுடன் விரிந்த தழல் வடிவமாய் எழுந்தருளிய எந்தையே எனப் பாடியிருப்பது தக்க சான்றாகும். முன்பு மாணிக்கவாசகரின் அகக்காட்சியில் சோதியாகவும் திருவடியாகவும் சிவமாகவும் தோன்றிய இறைவன் புறத்தே குருவடிவில் அவர் எளிதாய்க் காணுமாறு தோன்றினான்.

பொற்கழ லிணைகாட்டி
வேந்த னாய்வெளி யோன்முன் நின்றதோர்
அற்புதம்

எனவும்,

என் சிந்தையுள் நின்று பூங்கழல் காட்டிய பொருளே

எனவும்,

பரிமேற்கொண்ட சேவகனார்
ஒருவரை அன்றி உருவறி யாதுஎன்றன் உள்ளமதே

எனவும்

பரிமேற் கொண்ட பாண்டியனார்
ஓரின்ப வெள்ளத்து உருக்கொண்டு
தொண்டரை உள்ளங் கொண்டார்

என்னும் மாணிக்கவாசகர் தாம் இறைவனின் திருவடிக்காட்சியையும், உருவக் காட்சியையும் பெற்றமையைப் பாடியுள்ளார். அவர் மீண்டும் இறைவனை உருவாகாகக் காண விரும்பினார். மீண்டும் அவர் உருவக் காட்சியைக் கண்டபோது குருவாய்த் தோன்றினான் என்று பாடாமல்

வேந்தனாய் என்முன் நின்றான் பரிமேல் கொண்ட சேவகனாய் உருபிக்கொண்டான் எனப் பாடியிருப்பதற்குக் காரணம் தொடக்கநிலையில் மாணிக்கவாசகருக்குக் குரு வடிவில் இறைக்காட்சி அமைந்தது என்றும், பின்னர் அவரது மனவளர்ச்சிக்கு ஏற்ப உலக வாழ்வின் மையமாக - உலக வாழ்க்கையை உண்மையில் நடத்தும் வேந்தனாக - அருளரசின் மன்னனாக - அவர் பாண்டிய மன்னனின் அமைச்சராதலின், அத்தொடர்பால் பரிமேல்கொண்ட பாண்டியனாக இறைக்காட்சி நிகழ்ந்தது என்றும் கொள்ளலாம்.

ஒளிநெறி - மெய்யுணர்வைத் தருதல்

மாணிக்கவாசகருக்கு இறைவன் உருவங்காட்டிக் காட்சியளித்தான். அக்காட்சி மறைவை அவர் பிரிவாக உணர்ந்து துயரம் அடைகின்றார். அவர் மனப்பக்குவம் பெறமிக நீண்ட போராட்டத்தை நடத்தினார். மனம் ஒருசமயம் இறையன்பு மிகுந்தும் மற்றொரு சமயம் உலகப் பற்றுகளால் சூழப்பட்டும் இருந்தது. பற்று நீக்கல் முயற்சி முதிர்ந்து வரும்போது ஒளிநெறி தோன்றி இறைக்காட்சி தோன்றியதால் அவரது இறையன்பு பெருகுகின்றது. அக்காட்சி மறைந்ததும் மீண்டும் பற்றுகள் தொடர்கின்றன. ஆதலின் அவர் தம் மனத்தை நொந்துகொள்ளுகின்றார். இந்த உணர்வு மாற்றம் இருப்பதால் அவருக்கு இறைக்கலப்புக் கிடைக்கும் வரை இவர் பாடிய பாடல்களிலும் இவை அடுத்தடுத்து வெளிப்பட்டு நிற்கின்றன. அவர் தம் மனத்தோடு நடத்தியபோராட்டத்தில் தம் ஆற்றலை மட்டும் நம்பாமல் இறைவனின் கருணையையும் எதிர்பார்க்கின்றார். தன் வேண்டுகோள் நிறைவேறாததைக் கண்ட அவர் அவனது கருணை கிடைக்காதோ என ஐயுறுகின்றார்.

மாணிக்கவாசகருக்கு இறைவன் காட்டிய ஒளிநெறி, மெய்யுணர்வைத் தரும் புதிய அனுபவமாக அமைந்தது. ஒளிநெறி அவருக்கு உலக வாழ்வின் அடிப்படை உண்மையை நன்கு காட்டியது. தம்மை மையமாகக் கொண்டு உலகையும் வாழ்க்கையையும் நோக்கிய அவர் இறைவனே தம் வாழ்விற்கும் உலகிற்கும் மையம் என்று உணர்கின்றார். அவர் எல்லாப் பொருள்களிலும் இறைவனைக் கண்டு அவனது அருளே உலக வாழ்வை இயக்குகின்றது பந்தமும் வீடும் அவனே தருகின்றான் என்பதை உணர்கின்றார். பற்று நீக்கல் என்பதே இறையருளோடு தொடர்பில்லாதவற்றைப் போக்குதலே ஆகும்.

இருள் நெறித் தத்துவம்

மாணிக்கவாசகரின் இருளிரவு அனுபவம் அவரது ஒளிநெறி அனுபவத்தின் மறுதலையாகும். அவர் தம் ஒளிநெறி அனுபவத்தில் இறைவனது திருவடிக் காட்சியைப் பெற்று, அத்திருவடி தம் தலைமேல் சூட்டப் பெற்றவர். இறைவனது கலப்புநிலைக் காட்சியை அவன் வடிவம் கொண்டு வருவதாகவும், பெண்ணுடன் காட்சியளிப்பதாகவும் கண்டவர். இறைவனே தம் வாழ்வின் மையம் என்று உணர்ந்த அவர், இறைவனைத் தந்தை, தாய், பிள்ளை, நண்பன், நாயகன், நாயகி எனப்பாவித்து உறவு கொண்டாடியவர். ஆதலின் இருளிரவு அவருக்கு இறைவனின் பிரிவாக வந்தமைந்தது. அந்தப் பிரிவை எண்ணி அவர் துயரக் கடலில் மூழ்கினார். இதனை மாணிக்கவாசகர்,

பரிந்து வந்து பரமானந்தம் பண்டே
அடியேற்கு அருள்செய்யப்
பிரிந்து போந்து பெருமா நிலத்தில்
அருமால் உற்றேன் என்றென்று
சொரிந்த கண்ணீர்

எனப் பாடியிருப்பதிலிருந்து அறியலாம். மாணிக்கவாசகர் தம்முடைய இருளிரவு அனுபவத்தை செத்திலாப்பத்து, வாழாப்பத்து, அருட்பத்து, குழைத்த பத்து, பிரார்த்தனைப் பத்து, திருப்புலம்பல், எண்ணப்பதிகம், ஆனந்தமாலை கோயில் மூத்த திருப்பதிகம் ஆகிய பதிகங்களில் பாடியுள்ளார்.

மாணிக்கவாசகர் கண்ட காட்சி

பிறவாமையை வேண்டுவது உயர்ந்தோர் மரபு. ஆயினும் நல்லன கருதிப் பிறவியை வேண்டுவோரும் உள்ளனர். திருநாவுக்கரசர் ஆடல் வல்லான் திருக்கோலத்தைக் கண்டு கண்டு களித்திருக்கப் பிறவியை விரும்பினார். 'மனிதப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே' என்பது அப்பரடிகள் வாக்கு. அவாக்களும் ஆசைகளும் உள்ளவரை பிறவி நீக்கம் கிடைக்காது பொறிகள், புலன்கள், துய்ப்பனவெல்லாம் துய்த்து அவ்வழி அவ்வழி அவா நீங்கப் பெற்றனவாய் விளங்க

வேண்டும். ஆன்மா புலன்கள் வழியும் பொறிகள் வழியும் கடவுட் காட்சியை அனுபவிக்கும் தகுதி பெறவேண்டும். இத்தகுதி எளிதில் அமைவதில்லை. உடல் ஒரு துய்ப்புச் சாதனமே. துறவு, மதம், மடங்கள் ஆசிரமங்களுடன் பிணைந்துவிட்டதால் உணர்வுப்பூர்வமான துறவு இன்று இல்லை. துறவு என்பது புலனடக்கம் மட்டும் அன்று. திருமூலர் வழிநின்று புலன்களை மடை மாற்றலேயாகும். பொறிகளும் புலன்களும் உயர்குலத்திற்கு நல்லன செய்தலும், உயிர்கள் வழித்தாழும் மகிழ்தலே வாழ்வு நெறியாகும். மாணிக்கவாசகர் பொன் வேண்டாம், புகழ் வேண்டாம் என உறுதிபூண்டு பழுதிலாத் துறவு பூண்டார். பழுத்தமனத்து அடியார். ஆதலால் மாணிக்கவாசகருக்கு இந்த மண்ணிலேயே கடவுட் காட்சி கிடைத்தது. கண்ணால் யானும் கண்டேன் காண்க என்று தாம் கண்ட கடவுட் காட்சியை உறுதிப்படுத்துகின்றார்.

மாணிக்கவாசகர் தாம் பிறவாநிலையை அடைந்தது 'திண்ணிந்தான்' என்று உறுதிப்படுத்துகின்றார். தினையின் அளவு அவா இருந்தாலும் அந்த அவா வெள்ளமாக வளரும் இயல்பினது. அகந்தையும் அப்படிப்பட்டதே. பெருங்காயம் இருந்த பாண்டம் போல அகந்தையின் தாக்கம் இருக்கும். அகந்தைக்கு மானம் என்பது பெயராகும். சூரபன்மன் முருகவேளினை உணர்ந்து கொண்டுவிட்டான். முருகனை தொழுதிட நினைக்கின்றான். ஆனால் அவனைத் தடுத்தது மானமே ஆகும். மாணிக்கவாசகர் இந்த நிலைகளை எல்லாம் கடந்துவிட்டார். 'வேண்டிலேன் பொன்' 'வேண்டிலேன் புகழ்' 'ஏசப்பட்டேன் நின்னடியாரில்' என்பது திருவாசகமாகும்

பிறவியிலிருந்து விடுதலை பெறவழி தெரியாமல் தவித்திருக்கிறார் மாணிக்கவாசகர். தனியாக நின்று தவித்திருக்கிறார். இந்தச் சூழ்நிலையில் திருப்பெருந்துறையில் குருந்தமரத்தடியில் ஞானாசிரியனாக எழுந்தருளிய சிவபெருமான் நெறிகளை அறிவித்து வழிகாட்டியது பெறுதற்கரிய பேறாகும். உலகத்தின் எல்லா உதவிகளிலும் சிறந்தது வழிகாட்டும் உதவியேயாகும். வழியறியாது தவித்த மாணிக்கவாசகர், அவர் அருளிய திருவாசக வழி இன்று மக்கட் சமுதாய வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றார்.

தொடரும் .....

பதிப்பாசிரியர்

பேராசிரியர். இரா. சதாசிவம்

ஆசிரியர் குழு

இராசா. திரு. T.N.S. முருகதாஸ் தீர்த்தபதி

பேரறிஞர். திரு. தமிழண்ணல்

பேரறிஞர் திரு. செ. கந்தசாமி

டாக்டர் திரு. ந. சேதுராமன்

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

பேரறிஞர் திரு. அ. தட்சிணாமூர்த்தி

திரு. சே. அரிராமநாதன்

திரு. வே. திருவரங்கராசன்

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை-20. ✆ 2532879.
ஆசை அச்சகம், மதுரை. ✆ 26 222 50, 98434-32484